இமயமும் குமரியும்



கி.வா.ஜகந்நாதன்

அல்லயன்ஸ்

உ
சிவமயம்

சிவநேசர் திருக்கூட்டம்

திருமுறைப்போட்டிப்பரிசு

திருமுறை .... திருத்தெள்ளேணம்

தேர்ச்சி எண் III

பெயர் ....

ஊர் .... கொட்டையூர் .... வயது 10

சர்வஜித் .... ஆவணி .... 4 .... உ

காரியதரிசி



இமயமும் குமரியும்

(கட்டுரைகள்)

கி. வா. ஜகந்நாதன்
எழுதியவை

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை - 4

 1947 [ரு. 1-4-0

உள்ளுறை

The Alliance Press, Madras-4, Q.H.M.S. 109. MARCH-1947

முகவுரை

தமிழ் இலக்கியங்களிலே புகுந்து இன்பம் நுகரும் போது எத்தனையோ கருத்துக்கள் தோன்றுகின்றன. ஒரே புலவர் பல இடங்களில் சொல்லியிருக்கும் செய்தி களை ஒப்பு நோக்குவதில் ஒருவகைச் சுவை உண்டா கிறது. ஒரே கருத்தைப் பல புலவர்கள் வெவ்வேறு நூல் களிற் சொல்லியிருப்பதைக் கவனிக்கும்போது ஒருவகை இன்பம் எழுகிறது. சிலசில சமயங்களில் காலத்துக்கு ஏற்ப மாற்றிக் கவிஞர் கூறும் கருத்துக்கள் பின்னும் இன்பத்தை எழச்செய்கின்றன. ஒப்பு நோக்குவதில் உள்ள இன்பம் இப்படிப் பலவகைப்படுகிறது. தமிழ் நூல்களைப் படிக்கப் படிக்கத் தமிழ்ப் புலவர்கள் பாடிய பாடல்கள் தமிழருடைய உன்னதமான கொள்கைகளை வெளிப்படுத்துவதும், சில கொள்கைகளை எவ்வளவு கால மானாலும் மீட்டும் மீட்டும் வற்புறுத்துவதும், சிலவற்றை மாற்றிச் சொல்வதும் படித்து இன்புறற்கு உரியன. ஒரே கருத்தைச் சொல்ல வந்தாலும் வெவ்வேறு கவிஞர் வெவ் வேறு நிலைக்களத்தில் வைத்து வெவ்வேறு வகையில் கவிதையிற் புலப்படுத்தி யிருக்கின்றனர். கருத்தின் உயர்வை அறிந்து இன்புறுவது ஒருபால் இருப்ப, அதை வெளியிடும் தோரணையில் கவிஞனது திறமை வெளிப் படுவதை அறிகையில் கவியின் அழகு பலமடங்கு சிறந்து நிற்பதை உணரலாம்.

சங்க காலப் புலவர்கள் முதல் இத்தகைய இன்பங் களைத் தமிழ் நாட்டில் தமிழ்ப் புலவர்கள் கவிதை

யுருவத்தில் குவித்து வைத்திருக்கிறார்கள். வள்ளுவரும், கம்பரும், பிறரும் தமிழின்பத்தை உருவாக்கிக் குறளாக வும் ராமாயணமாகவும் பிற நூல்களாகவும் வழங்கினர். அவர்களுடைய பரம்பரையில் வந்த பாரதியாரும் இந்தக் காலத்தில் உண்டான புதிய உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுத்துத் தமிழ்க் கவிதைப் பூஞ்சோலையிலே புதிய மணமலர்களை மலரச் செய்திருக்கிறார்.

இந்த இன்பத் தமிழ்நெறியிலே சென்ற உள்ளத்தில் எழுந்த சிந்தனைகளில் சில சில பொறிகளே இந்தத் தொகுப்பு நூலில் இருக்கின்றன. அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் இவை. எந்தக் கருத்தையும் ஆராய்ச்சி முறை யில் ஆராய்ந்து முடிவு கண்டு தொகுத்துரைத்துவிட்ட தாக நான் கருதவில்லை. இன்ப உணர்ச்சி நெகிழ்ந்து வந்த சிறிய விளைவுகள் இவை என்றுதான் கொள்ள வேண்டும். ஒருகால் சிலருக்குச் சில கட்டுரைகள் இன்ப உணர்ச்சியின் விளைவாகத் தோற்றாமல் மாறாகத் தோற்றலாம். என் அநுபவம் இது, அவர்கள் அநுபவம் அது என்று நினைக்க எனக்கு உரிமை உண்டல்லவா?

இவற்றை அவ்வப்போது வெளியிட்ட பத்திரிகை யின் ஆசிரியர்கள்பாலும், இப்போது இவ்வுருவத்தில் வெளியிடும் அல்லயன்ஸ் கம்பெனியார்பாலும் நன்றிபாராட்டு கிறேன்.

29-3-47. கி. வா. ஜகந்நாதன்.

இமயமும் குமரியும்

உடலாலும் உரையாலும் உள்ளத்தாலும் மனிதன் செயல் ஆற்றுவான். இந்த மூன்றையும் திரிகரணங்கள் என்று கூறுவர். இந்த மூன்றிலும் தூய்மையுடையவனாக இருக்க மனிதன் முயலவேண்டும்.

உடலைத் தந்தவள் தாய்; உரையைத் தந்தது தாய் மொழி; உள்ளத்தைத் தந்தது தாய்நாடு. ஒரு தாயின் மக்களுக்குள் உடல் தோற்றத்தில் ஒரு பொதுமை இருக்கும். அவ்வாறே ஒரு தாய்மொழியைப் பெற்ற கூட்டத்தினரின் உரையில் ஒரு சமஷ்டியான பொதுமையைக் காணலாம். ஒரு நாட்டில் வாழ்வாரிடையே உள்ளப்பண்பில் ஒருவகைப் பொதுமையைக் காணலாம். நாட்டை 'நேஷன்' என்றும், உள்ளப்பண்பைக் 'கல்ச்சர்' என்றும் மேல்நாட்டினர் கூறுவர்.

ஒரு குடும்பத்தில் உள்ள சகோதரர்கள் தாயென்னும் பொதுப்பற்றை உடைமையால் ஒன்றுபட்டிருப்பர். ஒரு மொழியைப் பேசும் கூட்டத்தினர் தாய் மொழிப் பற்றுக் காரணமாக ஒன்றுபடவேண்டும்.

ஒரு நாட்டில் வாழ்வார் தாய்நாடு என்ற பொதுப் பற்றுத் தம்மைப் பிணிக்க ஒன்றுபட்டு விளங்க வேண்டும்.

'இந்தியா முழுவதும் ஒரு நாடு; ஒரே உள்ளப் பண்பை யுடையவர் வாழும் நாடு' என்று பழங்கால முதல் நாம் நம்பிவருகிறோம்; நூல்களும் சான்று பகர்கின்றன. இந்தியா என்ற பெயர் இதற்குப் பிற நாட்டார் வைத்து வழங்குவது. பரத கண்டம் என்ற பெயர் பழங் கிரந்தங்கள் சிலவற்றில் வழங்குகிறது. பெரும்பாலும் ஜம்புத்தீபம் அல்லது நாவலந் தீவு என் பதே இந்நாட்டின் பெயராகப் பல வடமொழி தென் மொழி நூல்களில் காணப்படுகிறது.

இயற்கை யமைப்பிலேயே இந்தநாடு மற்ற நாடு களிலிருந்தும் பிரிக்கப் பெற்றுத் தனித் தன்மை உடையதாக விளங்குகிறது. வடதிசைக்கண் வான் தோயும் இமயம், அறமும் தவமும் மலிந்த பாரத நாட்டுக்கு முடிபோல நின்று எல்லை கோலுகின்றது. அப்படியே தென்கோடியில் குமரிமுனை நாவலந் தீவின் தென் எல்லையாக உள்ளது. கிழக்கும் மேற்கு மாகிய இருமருங்கும் கடல்கள் எல்லை வகுக்கின்றன.

* * * *

தமிழ் நாட்டில் வாழ்ந்தவர்கள் மொழியினால் ஏனைய நாட்டினரோடு வேறுபட் டிருந்தாலும், உள்ளப் பண்பினால் நாவலந் தீவு முழுவதுக்கும் உரிய பொதுமையை மேற்கொண்டவர்களே. உடை, உணவு முதலியவற்றில் சில சில மாற்றங்களை அவர் களிடையே காணலாம்; ஆனாலும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களைப்

பற்றிய சிந்தனையில் யாவரும் ஒருவராகவே இருந்த னர். தமிழ் நாட்டுக்கு வடவேங்கடமும் தென்குமரி யும் எல்லையாக இருந்தாலும், தங்கள் உள்ளப் பண புக்கு எல்லை வடவிமயமும் தென் குமரியும் என் பதைத் தமிழர்கள் மறக்கவில்லை.

தமிழ் நாட்டு அரசர்கள் வடநாட்டு அரசர்க ளோடு தொடர்புடையவராக இருந்தனர். சேர சோழ பாண்டியர்கள் அக்கினி, கதிரவன், சந்திரன் என்னும் முக் குலத்தினராகத் தம்மைச் சொல்லிக்கொண்ட னர். சோழ அரசர்கள் தங்கள் முன்னோருள் ஒருவ ராகச் சிபிச் சக்கரவர்த்தியைக் கொண்டார்கள். கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னனைப் பாடிய மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண் புலவர், ஈகை அவன் குலத்துக்கே உரிய பண்பு என்று சொல்கிறார்.

புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக!

என்பது அவர் வாக்கு. "புறவினது வருத்தத்தைக் களையவேண்டி, கறை பொருந்திய அடியை உடைய யானையினது வெள்ளிய தந்தத்தால் கடைந்து செறிக் கப்பட்ட வெள்ளிய ஓரங்களை உடைய துலாக்கோலின் தட்டில் புகுந்த சிபிச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்தவனே!" என்பது இதன் பொருள். இதனால் பாரத நாட்டு மன்னவர் குலங்கள், ஒன்றனோடு ஒன்று தொடர்புடையவை என்பதை உணரலாம்.

தமிழ்நாட்டு மன்னர் பலர் வடக்கே சென்று, இமயத்தளவும் தம் புகழ் ஓங்கவேண்டுமென்ற அவா

விஞல், அம் மலையின்கண்ணே தங்கள் அடையாள பொறியைப் பொறித்தார்களென்று தெரிகின்றது. சேரன் ஒருவன் இவ்வாறு இமயத்தளவும் தன் வீரப் புகழைச் செறித்தமையால் 'இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன்' என்ற பெயரைப் பெற்ருன். சோழர் களுள் கரிகாலன் இமயத்துக்குச் சென்று தன் புலிப் பொறியைப் பொறித்தானென்று நூல்கள் கூறுகின் றன. அவ்வாறே உக்கிரகுமார பாண்டியன் தன் கயற் பொறியை இமயத்தின்மேல் பொறித்தாஞம். ஏக சக்கராதிபத்தியம் என்று அக்காலத்து மன்னர்கள் நினைத்தது இதைத்தான்; இமய முதல் குமரிவரையில் தம் ஆணை நிலவுவதையே அவர்கள் விரும்பினர். உள்ளப் பண்பால் ஒத்த மக்கள் வாழும் இந்த நிலப் பரப்பு முழுவதையும் தம் ஆட்சிக்குள் அமைப்பதே அவர்கள் லக்ஷ்யம். கடல் கடந்து பிறநாட்டில் வீரம் நாட்டிஞலும், தம் சொந்த நாடாகக் கொண்டு ஆள விரும்பியது இந்நாவலந் தீவைத்தான்.

மதுரைக் காஞ்சி யென்னும் பழந்தமிழ் நூலில் மாங்குடி மருதஞர் என்னும் சங்கப்புலவர் இந்தக் கருத்தைப் புலப்படுத்துகிருர். ஓர் அரசனது பெருமை யைக் கூறும்பொழுது நாவலந் தீவிலுள்ள மன்னர் அனைவரும் அம் முடிமன்னனுக்கு அடங்கி அவன் ஏவல் கேட்கின்றனர் என்று அமைக்கின்ருர். நாவலந் தீவுக்கு எல்லை வகுத்துக் காட்டுகிருர்.

> தென்குமரி வடபெருங்கல்
> குணகுடகட லாஎல்லைத்
> தொன்றுமொழிந்து தொழில்கேட்ப.

குறுங்கோழியூர்கிழார் என்னும் புலவர், யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும்

சேர அரசனைப் பாடுகின்றார். அவனுடைய முன்னோரது பெருமையைச் சொல்கிறார். அவர்கள் நாவலந்தீவு அனைத்தையும் ஒரு குடைக்கீழ் ஆண்டவர்கள். தெற்கே குமரியும், வடக்கே பெரிய மலையாகிய இமயமும், கிழக்கும் மேற்கும் கடல்களும் எல்லையாக உள்ள இப்பெரிய நிலப்பரப்பில், குன்று மலை காடு நாடு என்று பலவகையாக அமைந்துள்ள பிரதேசங்களில் உள்ளோர் யாவரும் ஒன்றுபட்டு அவர்களுக்கு வழிபாடு கூறினர். தீமையைக் கடிந்து செங்கோல் செலுத்தி, நியாயமாக வரும் வரியைப்பெற்று நடுநிலையிலே நின்று, யாரும் தடை கூறாதவண்ணம் தம் சக்கரத்தை உருட்டினார்கள். அவர் ஆணைச் சக்கரம் 'இனிதுருண்ட சுடர் நேமி' யாகத் திகழ்ந்தது. அவ்வாறு இந்நிலமுழுதும் ஆண்டவர்கள் வழியிலே பிறந்தவன் சேரன்.

இப்படிப் புலவர் பாடுகிறார்.

தென்குமரி வடபெருங்கல்
குணகுட லாஎல்லை
குன்றுமலை நாடுகாடு
ஒன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோல்திருத்திப்
படுவதுஉண்டு பகல்ஆற்றி
இனிதுஉருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல!

'ஒன்றுபட்டு வழிமொழிய' என்று கூறுவதன் கருத்தைச் சிந்திக்க வேண்டும். அடக்குமுறையாலும், செயற்கையினாலும் மக்கள் ஒன்றுபட இயலாது. ஒன்றுபடும் உள்ளப் பண்புடையவர்களே ஒன்றுபடுவார்கள். தென்குமரி வடபெருங்கல் ஆகிய இரண்டுக்

கும் இடையே ஒரே உள்ளம் சிந்திக்கின்றது. ஆகவே ஒன்றுபடுவது எளிதாயிற்று.

* * *

தமிழர், இமயமும் குமரியும் இணைந்த உள்ளப் பண்பை நன்கு உணர்ந்திருந்தனர். பல காதப் பரப்பு இடையிட்டு இவ்விரண்டும் பிரிந்திருந்தாலும், நாவலந் தீவின் சால்புக்கு இவை இரண்டும் முடியும் அடியும் என்பதை அவர் தேர்ந்தனர். நூல்களிலும், பழமொழி களிலும், பழக்க வழக்கங்களிலும் இமயமும் குமரியும் இணைந்திருக்கும் ஒற்றுமையைத் தமிழர் குறிப்பித்து வந்தனர்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யைக் காரிகிழார் என்னும் புலவர் பாடுகிறார். அவன் புகழ் விரிகின்றது; நாவலந் தீவையும் கடந்து செல் கின்றதாம். இதைச் சொல்லும்போது எல்லை கூறு கின்றார்.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்.

[பனிபடு நெடுவரை - இமய மலை. தெனாஅது - தெற்கில் உள்ளது. உரு - அச்சம். குணாஅது - கிழக் கின் கண்ணது. தொடுகடல் - சகரரால் தோண்டப் பட்ட கீழ்கடல். குடாஅது - மேற்கில் உள்ளது. தொன்று முதிர் பௌவம் - பழையதாக முதிர்ந்த மேல்கடல்.]

சேரமான் ஒருவனை ஒரு புலவர் வாழ்த்துகிறார். "நீ அசஞ்சலனாக வாழவேண்டும்" என்று கூற வந்தவர்,

பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே என்று உவமை சொல்லுகிறார். காஞ்சன சிருங்கத்தை யுடைய இமாசலத்தையும், பொதியமலையையும்போல, நீ அசஞ்சலனாக வாழவேண்டு மென்பது அவர் வாழ்த்து. குமரியைக் கூறவிட்டாலும் பொதியிலைக் கூறினார். வடமலையும் தென்மலையும் ஒன்றுபடுகின்றன.

பிசிராந்தையார் என்ற சங்கப்புலவர் ஓர் அன்னத்தைப் பார்த்துப் பாடுவதுபோல வைத்துக் கோப்பெருஞ் சோழனது பெருமையை விளக்குகிறார். இமயமும் குமரியும் அன்னச் சேவல் வாழ்க்கையிலும் ஒன்றுபடுகின்றன. இமயமலையில் உள்ள மானஸ சரோவரமென்னும் பொய்கையில் அன்னங்கள் வாழ்கின்றன என்பர். பிசிர் ஆந்தையார் கண்ட அன்னம், தென் குமரித் துறையில் உள்ள அயிரை என்னும் மீனை உண்டுவிட்டுத் தன் இனத்தார் வாழும் இமய மலைக்குச் செல்கின்றது. அதை இடைமறித்துக் கூறுகின்றார் புலவர் :

அன்னச் சேவல், அன்னச் சேவல்

....

குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின்.

வட நாட்டிலே வாழ்ந்தோர் ஏதேனும் பாவம் செய்தால் குமரியாட வருதல் வழக்கம். இது சீவக சிந்தாமணி முதலிய நூல்களால் விளங்கும். தமிழ் நாட்டிலுள்ளார் அவ்வாறே கங்கையாடச் செல்வது மரபு.

'ஆஸேது ஹிமாசல பரியந்தம்' என்ற தொடர் நாவலந் தீவின் ஒருமையைக் காட்டுவது. 'காசி

முதல் ராமேசுவரம் வரையில்' என்ற உலக வழக்கும் இதையே குறிக்கும். இன்றும் காசிக்குச் சென்று கங்கையில் நீராடினோர், கங்கை நீரைக் காவடியாகக் கட்டி எடுத்துவந்து ராமேசுவரம் சென்று ராமநாதப் பெருமானுக்கு அந்தக் கங்கை நீரை அபிஷேகம் செய்த பிறகே, காசியாத்திரை நிறைவேறியதாக எண்ணுவர். 'காசிக்குப் போனான், காவடி கொண்டு வந்தான்' என்ற பழமொழி இந்தச் செயலைக் குறிக்க வந்ததே.

வடநாட்டில் நிகழ்ந்த புராண நிகழ்ச்சிகளையெல்லாம் அறிந்த தமிழ் நாட்டினர், தென்னாட்டிலும் அத்தகைய நிகழ்ச்சிகளை நினைவுறுத்தும் தலங்களை ஏற்படுத்தி வழிபடுகிறார்கள். இமாசலத்தில் பார்வதி கல்யாணம் நடைபெற்றது; பொதியிலைச் சார்ந்த பாவநாசத்திலும் அது நடைபெற்றதாகப் புராணம் கூறுகிறது. ராமாயண பாரதக் கதைகளோடு சம்பந்தப்படுத்தி, தங்கள் தங்கள் ஊர்களுக்குத் தமிழ் நாட்டார் கதைகளை அமைத்துக் கொண்டிருக்கின்றனர். "வடக்கே நிகழ்ந்தவை எங்களுக்கும் சொந்தம்" என்ற கருத்தைப் புலப்படுத்துவன அவை.

இமயமும் குமரியும் இந்திய நாட்டின் எல்லை; இந்நாட்டுக்கே உரிய சால்புக்கும் அவை எல்லை. பரந்துபட்ட இந்த நிலப்பரப்பிலுள்ள சமஷ்டியான ஒருமையை அவை அரண்செய்து பாதுகாக்கின்றன.

தென்குமரி வடபெருங்கல்
குணகுட லாவெல்லை

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த சங்கப்புலவர் இந்த ஒருமையை நினைந்து பாடினார்.

நம் கண்முன் வாழ்ந்து புகழுடம்பு பெற்ற பாரதி யாரும் அதையேதான் பாடுகிருர்.

வடக்கில் இமயமலை பாப்பா--தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரியகடல் கண்டாய்--இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா !

வேதம் உடையதிந்த நாடு--நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு -
சேதமில் லாதஹிந்துஸ் தானம்--இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா !

'இந்துஸ்தானம் பூகோள எல்லையில் அடங்கியது மாத்திரமன்று. வைதிகப் பண்பும் வீரமும் சேர்ந்து ஒன்றுபட்டு அந்த ஒருமையிலே பிளவின்றிப் பிரி வின்றிச் சேதமின்றி விளங்குவது' என்ற அரிய தத்துவத்தைத்தான் பாரதியார் இந்தப்பாப்பா பாட் டின் மூலமாகப் பெரியவர்களுக்கும் உபதேசம் செய்கிருர்.

ஒளித் திருநாள்

உடையும் உணவும் மனிதனுக்கு மிகவும் அவசியமானவை. உடை மானம் காப்பது; உணவு உயிரைக் காப்பது. இரண்டும் அவசியமாக இருந்தாலும் உயிரைக் காக்கும் உணவு சில நாட்கள் இல்லாமலே காலம் கழிக்கலாம். உடை இல்லாமல் அரை நிமிஷமும் வெளியில் உலவ முடியாது. மானம் போவதைவிட உயிர் போவது பெரிதல்ல.

மனிதனுக்கு மானம் சிறந்த பூஷணம். பழைய காலத்தில் சிறந்த அரசர்களுக்கு "மானுபரணன்" என்ற பட்டப் பெயர் வழங்கியதுண்டு. எவ்வளவு அலங்காரங்கள் இருந்தாலும் ஆடை இல்லாவிட்டால் அவ்வளவு அலங்காரமும் வீணாகிவிடும். "அணியெல்லாம் ஆடையின் பின்" என்று ஒரு புலவர் கூறுகிறார்.

தமிழ் நாட்டில் உடை, உணவு என்னும் இரண்டிலும் தம் கைவன்மையைக் காட்டும் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு வீட்டிலும் உடைக்காக நூற்றலும், உணவுக்காகச் சமைத்தலும் மகளிர்களுடைய தலைமையான கடமைகளாக இருந்தன. கணவனை இழந்த பெண்கள் தம் மனம் சாந்தி உறுவதற்கும், பொழுது போவதற்கும் நூல் நூற்றலைத் துணையாகக் கொண்டிருந்தார்கள். ஒரு புலவர் வெள்ளிய மேகத்தை வருணிக்கிறார். அதற்கு உபமானம் சொல்ல வரும்போது, "கணவனை இழந்த மகளிர் நூற்கும் பொருட்டுப் பன்னிய பஞ்சைப் போன்றது" என்று

அமைக்கிறார். "ஆளில்பெண்டிர் தாளிற் செய்த நுணங்குநுண் பனுவல் போல" என்பது அவர் பாடல். நூற்கும் பழக்கத்தை உடைய பெண்களைப் 'பருத்திப் பெண்டிர்' என்று சொல்லுவார்கள். மிக மெல்லிய நூலை நூற்கும் ஆற்றல் மங்கையருக்கு இருந்தது.

புத்தகத்துக்கு நூல் என்னும் பெயர் வந்ததற்குக் காரணம், அது மடமங்கை ஒருத்தி நூற்கும் நூலைப்போல அழகும் உரமும் பயனும் உடையதாக இருப்பதனால்தான். 'நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளால் கைவல் மகடூஉத் தனது செய்கை மாண்பினால் ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நூல் நூற்றல் என்பது' என்று இறையனா ரகப்பொருள் என்னும் இலக்கண நூலின் உரை ஆசிரியர் எழுதுகிறார். பெரும்பாலும் பெண்டிரே நூல் நூற்றுவந்தனர் என்று பழைய நூல்களில் உள்ள பகுதிகளால் தெரியவருகின்றது.

நூற்ற நூலை நெய்வதற்குத் தொழிலாளர்கள் தனியே உண்டு. பிற்காலத்தில் செங்குந்தர், சாலியர் என்று வழங்கும் சாதியினர் இத்தொழிலைச் செய்து வருதலை நாம் அறிவோம். பழங்காலத்தில் அறுவையர், காருகர் என்ற பெயர்களால் நெய்தல் தொழிலைச் செய்பவரை வழங்கினர். பெரிய நகரங்களில் நெசவுத் தொழிலாளர் வீதிகள் தனியே இருந்தன.

காவிரிப்பூம்பட்டினம் சோழர்களுடைய ராஜதானி. அங்கே பழங்காலத்தில் வியாபாரம் மிகச் சிறந்த நிலையில் இருந்தது. வெளிநாட்டு ஜனங்கள் பலர் வந்து தமிழ்நாட்டுப் பண்டங்களைக் கொண்டும், தம் நாட்டுப் பண்டங்களைக் கொடுத்தும் சென்றனர்.

காருகர் என்னும் தொழிலாளர்களில் இரண்டு பிரிவினர் இருந்தனர். நூலால் ஆடையை நெய்வோர் ஒரு வகை; அவற்றை விற்பனை செய்யவேண்டிய இடங்களுக்குக் கொண்டு சென்று விற்பவர் ஒரு வகை.

பட்டாலும், மயிராலும், பருத்தியாலும் ஆடைகளைச் செய்தனர். எலி மயிரால்கூட மெல்லிய கம்பளங்களைச் செய்தார்களாம்.

பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்

மதுரையில் இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. மிகவும் நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த ஆடைகளை அவர்கள் நெய்தார்கள். அதனால்தான் "கட்டு நுண்வினைக் காருகர்" என்று அவர்களைச் சிறப்பித்திருக்கின்றார் ஆசிரியர்.

பாண்டி நாட்டின் தலைநகர் மதுரை. அந்த நகரத்தில் சிறியோரும் பெரியோருமாகிய நெய்தல் தொழிலைச் செய்பவர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் கடைகளில் ஆடைகளை விரிப்பார்கள். அவை அலைகள் நெளிந்து கொடுப்பதைப்போல அழகாகப் படியும். அளவினால் சிறிய ஆடைகளும் பெரிய ஆடைகளுமாக நிறைத்து வைத்திருப்பார்கள்.

தெண்திரை அவிர்அறல் கடுப்ப ஒண்பக்
குறியவும் நெடியவும் மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினும் கால்உற நிற்றர

என்று மதுரைக் காஞ்சி என்னும் சங்க நூலில் அவர்கள் சிறப்பைக் காணலாம். 'தெளிந்த அலைகளில் விளங்குகின்ற மடிப்பைப்போல ஒள்ளிய பலவாகிய

சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்பை உடைய ஆடைகளைக் கொண்டுவந்து விரித்துச் சிறியோரும் பெரியோருமாகிய நெய்தல் தொழிலைச் செய்வார் திரண்டு, நான்காய் வேறுபட்ட தெருவுகள்தோறும் ஒருவர் காலோடு ஒருவர் கால் நெருங்க நிற்றலைச் செய்ய' என்பது இதன் பொருள்.

மதுரையில் உள்ள ஜவுளிக்கடைகளைச் சிலப்பதிகார ஆசிரியரும் வருணிக்கின்றார். நூலாலே பண்ணின ஆடைகள், மயிரால் அமைந்த கம்பளங்கள், மிகவும் மெல்லிய பட்டு நூலால் அமைந்த ஆடைகள் முதலியன அந்தக் கடைகளில் நூற்றுக்கணக்காக அடுக்கிக் கிடக்கின்றன. ஆடைகளுக்கு வாசனை ஊட்டுவது அக்கால வழக்கம். அந்த ஆடைகள் கமகம என்று மணக்கின்றன. "எத்தனை ரகங்கள் இருக்கின்றன?" என்று ஆராயப் புகுந்தால் சுலபமாகப் பார்த்து முடித்துவிட இயலாது.

நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்

என்பது சிலப்பதிகாரப் பகுதி.

காஞ்சீபுரத்து அறுவை வீதியை மணிமேகலை ஆசிரியர் வருணிக்கிறார். அங்குள்ள ஆடைகளின் வேலைப்பாடு அற்புதமானது. இழையோடு இழை இணைந்திருப்பதைப் பார்க்க முடியாதபடி அவ்வளவு நுண்ணிய கைத்தொழிலால் அமைந்தவை அவை. பார்வை இழையூடே நுழைய இயலாதாம். அத்தகைய ஆடைகளைச் செய்வார் வீதி காஞ்சீபுரத்தில் தனியே இருந்தது.

கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை
வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகு.

ஆடைவகைகளும், அவற்றிலே செய்யப்பெற்ற கைத்தொழில் வகைகளும் பல.

இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் சமுதாயத்தில் நல்ல பதவியில் இருந்தனர். பொது மறையாகிய திருக்குறளைச் செய்த திருவள்ளுவர் நெய்தல் தொழிலைச் செய்துவந்தார். மக்கள் செய்யும் தொழில்கள் பலவற்றுள்ளும் 'நெய்தல் தொழிலுக்கு நிகரில்லை' என்று அவர் நினைத்தாராம்.

ஜவுளி வியாபாரம் செய்துவந்த புலவர் ஒருவர் இயற்றிய பாடல்கள் சங்க காலத்து நூல்களில் இருக்கின்றன. மதுரையில் வாழ்ந்தவர் அவர்; இளவேட்டனார் என்பது அவர் பெயர்; ஆடை வியாபாரம் செய்தமையால் அவரை அறுவை வாணிகன் இளவேட்டனார் என்று வழங்கிவந்தனர்.

* * *

நூற்றலும் நெய்தலும் ஆடை விற்றலுமாகிய தொழில்கள் மதிப்பிற்கும் புலவர் பாராட்டுக்கும் உரியவை என்பதைத் தமிழ் நூல்களால் அறியலாம்.

புதிய ஆடை அணிவதும், புதிய ஊண் நுகர்வதும் உவகைக்கு உரிய செய்திகள். வயல்களில் விளைந்துவந்த தானியத்தை முதல் முதலில் உணவாக்கி உண்ணும்போது மக்களுக்கு அளவற்ற இன்பம் உண்டாகும். "புதிதுண்ணல்" என்று அதனைச் சொல்வார்கள். அப்படியே புதிய உடைகளை அணிதலையும் சந்தோஷமான காரியமாகக் கருதுவர். இந்த இரண்டையும் தமிழர் இரண்டு பண்டிகைகளாகக்

கொண்டாடுகின்றனர். புதிது உடுத்தலைத் தீபாவளியன்றும், புதிது உண்ணலைப் பொங்கலன்றும் மேற்கொள்வது நம் வழக்கம்.

பிறந்த நாளன்று புத்தம் புதிய வெள்ளாடை அணிவது பழைய காலத்து வழக்கம். அதை வெள்ளணி நாளென்று சொல்லுவார்கள்.

நறு நீராடிப் புதியது உடுத்து விளக்கு ஏற்றி வழிபட்டு விருந்து உண்ணுவதுதான் இந்நாட்டுக்குரிய பழக்கம். வெடி சுட்டுக் காசைக் கரியாக்கும் வழக்கம் பிற்காலத்தில் வந்தது. நம்முடைய மானத்தைக் காப்பாற்றும் வழி நமக்குத் தெரியும் என்ற உறுதியை நெஞ்சில் நிறுத்திப் புதிய ஆடை. அணிந்து மகிழ்வதே தீபாவளியின் கருத்தாக வேண்டும். உடைச் சிறப்பை விளக்கும் ஒளித் திருநாள் இது. உணவுச் சிறப்பை விளக்கும் உவகைத் திருநாள் பொங்கல்.

வள்ளுவர் வைகிறார்

திருவள்ளுவர் உலகத்துக்கே உபதேசம் செய்ய வந்த பெரியவர். மகா சாது. இனிய வார்த்தைகள் கூறவேண்டுமென்பதை வற்புறுத்துபவர். "இனிய வார்த்தைகள் இருக்கும்போது வன்சொற்களை வழங்க வேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்கிறவர் அவர். 'அவருக்குக் கோபம் வருகிறது, கடுமையாகப் பேசுகிறார், வன்சொல் வழங்குகிறார்' என்றால் அதற்குக் காரணமில்லாமல் போக நியாயம் இல்லை. குணம் என்னும் குன்றேறி நின்ற வள்ளுவருடைய வெகுளி மிகவும் கொடூரமானது. அது கணப் போது நிற்பதாக இருந்தாலும் பாதுகாப்பதற்கு அரியது.

நல்ல வேளையாக அவர் யாரையும் குறிப்பிட்டுக் கோபித்துக் கொள்ளவில்லை. பொதுவாகச் சில குணங்களையும் அந்தக் குணமுடையாரையும் நினைக்கும்பொழுது அவரை அறியாமலே சினம் பொங்குகிறது போலும்!

நாகரிக உணர்வுடைய மக்களுக்குக் கோபம் வந்தால் அவர்களுடைய வசவுகள் தனிப்போக்காகத் தான் இருக்கும். இழிந்த சுபாவம் உள்ளவர்கள் வாழ்த்தினால்கூட அந்தப் பாஷை நயமாக இராது. வள்ளுவர் கோபம் மூண்டு வைதால்கூட அது கவிதையாக இருக்கிறது.

யாராவது தகாத காரியம் செய்துவிடுகிறான். அவனைக் கண்டாலே நமக்குக் கோபம் வருகிறது. "அவனும் ஒரு மனுஷனா?" என்று கடிந்து சொல்கிறோம். வள்ளுவருக்குக்கூட இந்த மாதிரி கடிந்து சொல்லத் தெரியும். உபயோகமில்லாமல் "சள சள" என்று பேசிக்கொண்டு தன் வாயையும், கேட்போர் காதையும் வலியெடுக்கும்படி செய்கிறானே, அந்த மகானுபாவனைத்தான் அப்படி வைகிறார். "சே, அவன் ஒரு மனிதனா? பயனில்லாத வார்த்தைகளைக் கொட்டுபவனை மனிதன் என்று சொல்லக்கூடாது; மனிதர்களுக்குள் பதர் என்று சொல்லவேண்டும்" என்று கூறுகிறார்.

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்

* * *

"சோற்றுக்குக் கேடாக உட்கார்ந்திருக்கிறதே, இது இருந்து என்ன, இல்லாமற் போனால்தான் என்ன?" என்று யாரோ கொடூர குணமுள்ள மருமகள் தன் கிழட்டு மாமியாரைப் பார்த்துச் சொல்கிறாள் என்று நினைக்கும்படி இருக்கிறது ஒரு பேச்சு. வள்ளுவர் அப்படிச் சொல்கிறார் என்றால் நம்பத் தோன்றுகிறதா?

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பொதுவான காரியங்கள் சில இருக்கின்றன; சிறப்பான காரியங்களும் உள்ளன. மனிதனுக்குச் சிறப்பைக் கொடுப்பவை கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் என்பவை. ஒருவர் நல்ல விஷயத்தைச் சொன்னால் கேட்டு ரஸிக்கத் தெரிந்தால்தான் அவனை மனிதனாகச் சொல்லலாம். இல்லாவிட்டால் இரண்டு கால் மிருகம் என்று

சொல்லவேண்டும். "செவி யுணர்ச்சி யில்லாமல், ரஸிக்கும் திறமையில்லாமல், சோற்றுச் சுவையை உணரும் அவர்கள், இந்த உலகத்தில் செத்துப்போனால் என்ன? வாழ்ந்தால்தான் என்ன?" என்று கேட்கிறார் பொதுமறை ஆசிரியர்.

செவியிற் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?

* * *

அக்கிரமமான காரியம் செய்தவர்களைக் கண்டால் நல்ல மனிதர்களுக்கு வயிறு எரிகிறது. அவர்களை வையத் தோன்றுகிறது. "சோற்றுக்கும் துணிக்கும் இல்லாமல் நீ நாசமாய்ப் போகவேணும்!" என்று அடிவயிற்றிலிருந்து கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. பொறாமைக்காரனைப் பார்க்கும்போது வள்ளுவருக்கும் அப்படித்தான் வருகிறது கோபம்.

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

'ஒருவன் கொடுப்பதைப் பார்த்துப் பொறாமை கொள்பவனைச் சேர்ந்த உறவினர்கள்கூடப் பிண்டத்துக்கும் துண்டத்துக்கும் வழியில்லாமல் நாசமாய்ப் போய்விடுவார்கள்' என்று அவன் சுற்றத்தாரையும் சேர்த்துச் சபிக்கிறார்.

* * *

"தனக்காகவும் தெரியாது, சொன்னாலும் கேட்க மாட்டான்" என்று ஒரு பழமொழி உலகத்தில் வழங்குகிறது. அந்தக் குணத்தை உடையவனை வள்ளுவர், சீக்கிரம் செத்துப்போனால் நல்லது என்று குறிப்பிடுகிறார். ஒரு மனிதனுக்கு நோய்வந்தால்

எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது! ஓர் ஊர் முழுவதும் தொற்று நோய் வந்துவிட்டால் அதை அடியோடு விரட்ட என்ன என்னவோ ஏற்பாடுகள் செய்கிறார்கள். இந்த முட்டாள் இருக்கிறானே, இவன் உலகத்துக்கே நோயைப் போன்றவனாம். 'சமுதாயத்துக்குப் பிளேக் நோய் போன்றவன்' என்று இங்கிலீஷில் சொல்வது வழக்கம். இவன் உயிர் போமளவும் இந்த உலகத்துக்கு நோயும் போகாதாம்!

ஏவவும் செய்கலான், தான்தேறான், அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய்.

'நீ நாசமாய்ப் போகவேணும்; நிர்மூலமாகப் போகவேணும்; செத்துப் போகவேணும்!' என்பவை இக்காலத்திலும் வசவாக வழங்குகின்றன. வள்ளுவர் கோபத்தில் வழங்கும் வசவுகளில், "இந்தக் குணமுடையவன் செத்துப்போவது நல்லது" என்று சொல்வதும் ஒன்று. மறைவாக ஒருவனைப் பற்றிப் புறங்கூறும் இழிந்த சுபாவம் உடையவன் உயிரை வைத்துக் கொண்டிருப்பதைவிட விஷங் குடித்துச் செத்துப் போகலாமென்று சொல்கிறார்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.

அந்த மாதிரி தர்மத்தை நினைந்து செத்துப் போகாமல் வாழ்கிறவர்கள் பூமிக்குப் பாரமாம். அப் பாரத்தைப் பூமி தாங்குவது 'ஏதோ தர்மமாகப் போகட்டும்' என்ற உணர்ச்சியினாலாம்.

அறன் நோக்கி ஆற்றுங்கொல் வையம்? புறநோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

"நிலத்துக்குப் பாரமாக ஏன் இருக்கிறாய்?" என்று கோபித்துப் பேசும் வார்த்தைகளை நாம் பல

முறை கேட்டிருக்கிறோம். வள்ளுவர் யார் யாரை நிலத்துக்குப் பார மானவர்கள் என்று நினைக்கிறார் தெரியுமா? முன்னாலே சொன்ன புறங்கூறும் பேர் வழி, கொடுங்கோல் அரசனைச் சார்ந்த கூட்டம், தாக்ஷிண்யம் என்பது மருந்துக்கும் இல்லாதவன், பணத்தைக் குவித்துக் குவித்துப் பொன் காக்கும் பூத மாக இருப்பவன் ஆகியவர்களைப் பூமிக்குப் பாரமான வர்களாக அவர் சொல்கிறார்.

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல், அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை.

கொடுங்கோலனாகிய அரசன், நீதி நூல் முதலிய வற்றைப் படிக்காமல் தனக்குத் தாளம்போடும் முட்டாள்களையே பக்கபலமாகச் சேர்த்துக்கொள்வான்; அந்தக் கூட்டத்தைவிட உலகத்துக்குப் பாரம் வேறு இல்லை.

கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

தாட்சிண்யம் என்று சொல்லும் கண்ணோட்டம் இருப்பதனால்தான் உலகம் நடக்கிறது; அது இல் லாதவர்கள் இந்த உலகத்தில் இருப்பது நிலத்திற்குப் பாரந்தான்.

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

நாம் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக வாரிக் குவிக்க வேண்டுமென்று பணத்தைச் சம்பாதிக் கிறதை மாத்திரம் வைத்துக்கொண்டு, அதனால் பெரும் புகழை விரும்பாத மனிதப் பிறப்பு உலகத்துக் குப் பாரம்.

கோபத்தின் உச்ச நிலையில் "பாவி!" என்று வைகிறார் வள்ளுவர். மனிதர்களை வையவில்லை; கெட்ட குணங்களையே வைகிறார், அந்த வசவை வாங்கிக் கொள்வன இரண்டு குணங்கள். பொறாமையையும் தரித்திரத்தையும் அவர் இந்தப் பட்டத்துக்கு உரியவை யாகத் தேர்ந்தெடுக்கிறார்.

அழுக்காறெனவொரு பாவி.
இன்மை யெனஒரு பாவி.

தரித்திரம் பிடித்தவர்களை வைது பயன் இல்லை; ஆகையால் தரித்திரத்தை வைகிறார்.

அதோடு நிற்கவில்லை. வறுமையினால் பிறரிடம் சென்று மக்கள் யாசகம் செய்கிறார்களே, அது எவ்வளவு இழிந்த நிலை? தரித்திரம் ஒழியவேண்டும் என்பது அவர் கருத்து.

"உலகத்தில் வயிறு பிழைக்க யாசகங்கூட ஒரு தொழிலா? யாசகம் செய்து உயிர் வாழும்படி யாகப் படைக்கும் கடவுள் ஒருவன் இருக்கிறானே; அப்படியானால் அந்தக் கடவுள் நாசமாய்ப் போகட்டும்!" என்று சாபம் கொடுக்கிறார்.

"உலகத்தைப் படைக்கிறவன் மக்களைப் படைக்கிறான்; வயிற்றைக் கொடுக்கிறான்; பசியைக் கொடுக்கிறான். பசியை நீக்க உணவு வேண்டியிருக்கிறது. உணவைச் சம்பாதிக்க எவ்வளவோ தொழில்கள் இருக்கின்றன. அந்தத் தொழில்களை விட்டு அந்த மனிதன் யாசகம் செய்து உயிர் வாழட்டும் என்று பிரமதேவன் விதித்தானானால் அவன் நாசமாய்ப் போகட்டும்" என்று உள்ளம் குமுறுகிறார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

'இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ்பவர்களுக்கு, வேலை செய்து வாழ்வதை விட்டு, யாசகம் செய்து உயிர்வாழ்வதை வேண்டுமென்று விதித்தானானால், அந்தக் கொடியவன் அவர்களைப் போலவே எங்கும் திரிந்து அலைந்து கெடுவானாக!'

பிரமன் யாசகர்களுக்கு இடுந்தண்டனையை அவனுக்கே இடுகிறார் வள்ளுவர்!

"வள்ளுவப் பெருமானே, சிலர் தங்களைப் பிரமதேவனது திருவவதாரம் என்று சொல்கிறார்களே! அப்படி இருக்கத் தாங்கள் இப்படிச் சாபம் இடுவது தகுமோ?" என்று கேட்கலாமா? அப்படிக் கேட்டால், "யாராக இருந்தாலும் சரி, பரந்து கெடுக!" என்றே அவர் சொல்வார்.

வள்ளுவரும் காந்தியும்

தமிழில் உள்ள இலக்கியங்களுள் உலகம் முழுவதும் பரவத்தக்க பொருட்செறிவும் பொதுப்பண்பும் வாய்ந்தது திருக்குறள். இந்த உண்மையை உணர்ந்தே பாரதியார், குறள் உலகம் முழுவதுக்குமே சொந்தமான நூல் என்று பாடுகிறார்.

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு

என்பதில் அந்தக் கருத்துத் தோன்றுகிறதல்லவா?

சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பியிருப்பதோடு, வாழ்க்கைக்கு உதவும்படியான கருத்துக்கள் செறிந்திருக்கும் அநுபவ நூல் அது. வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்குத் துணையாக நம் நாட்டார் சுருதி ஸ்மிருதிகளைக் கொண்டிருக்கிறார்கள். அவை வாழ்க்கைச் சட்டங்கள். திருக்குறளையும் அவற்றைப்போலவே வாழ்வில் இன்பந்துய்க்க வரையறையான நீதிகளைக் கூறும் சட்ட நூல் என்று சொல்லலாம். ஆனால் இரண்டுக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. வாழ்க்கைக்கு இலக்கணம் வகுக்கும் நீதி நூல்களை மக்கள் விரும்பிப் படிப்பதில்லை. சட்ட நூலை யாரேனும் விரும்பிப் படிக்கிறார்களோ? இலக்கண நூல்கள் எல்லாமே, மொழிக்கு இலக்கணமாக இருந்தாலும் சரி, வாழ்க்கைக்கு இலக்கணமாக இருந்தாலும் சரி, மக்களுக்குக் கவர்ச்சி தருவதில்லை.

இந்தத் திறத்தில் திருக்குறள் வேறுபடுகின்றது. அது வாழ்க்கை நியதிகளை வரையறுக்கும் நூல்; வாழ்க்கைக்கு வரம்புகோலும் சட்ட நூல்தான். ஆயினும் சுவை நிரம்பிய இலக்கியமாக, படிக்கப் படிக்க இன்பந்தரும் காவிய ருசியோடு விளங்குகிறது.

உலக முழுவதுக்கும் பொதுவான உண்மைகளைத் திருக்குறள் கூறுகிறது. அதனால் அதற்குப் பொதுமறை என்ற பெயர் வழங்குகிறது. எங்கும் வழங்கும் பெருமைக்கு உரியதாக இருப்பதோடு என்றும் வழங்கும் பெருமையும் அதற்கு உண்டு. இட எல்லை கடந்து நிற்கும் தன்மையும் காலங்கடந்து நிற்கும் தன்மையும் அதன்பால் இருப்பதற்கு அது கூறும் பேருண்மைகளின் செறிவும் ஆழமுமே காரணம்.

இந்த இயல்பைத் திருக்குறளைச் சிறப்பிக்க வந்த ஒரு பாட்டு வெளியாக்குகிறது. அது வாடாத மாலை போன்றதாம். என்றும் வாடாதது. எப்போதும் மலர்ச்சியோடு விளங்குவது. காலத்தின் மாறுபாடுகளால் கலங்காது எதிர்தோன்றி நிலைத்து நிற்பது. தன்னைப் பயில்வார்களுக்குத் தேன்போலச் சுவை மலிந்து விளங்குவது. இப்படி இந்தப் பாட்டில் திருக்குறளின் பெருமை சொல்லப்பெறுகிறது.

என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்.

புதிய புதிய காலங்கள் வந்தாலும் அந்த அந்தக் காலங்களுக்கும் பொருத்தமான உண்மைகளைச் சொல்லிக் கால வெள்ளத்தில் நிலைநிற்கும் என்ற கருத்தை, "யாணர்நாள் செல்லுகினும் நின்று அலர்ந்து"

என்ற பகுதி குறிப்பிக்கிறது. யாணர் நாள்—புதுக் காலம்.

உண்மை எவ்விடத்தும் எக்காலத்தும் உண்மையாகத்தான் இருக்கும். "உண்மையே அழகு" என்று கூறுவர். சிறந்த உண்மைகளைச் சொல்லும் பேரிலக்கியமாகிய திருக்குறள் அழகிய இனிய நூலாக இருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

இந்த இருபதாம் நூற்றாண்டில் நம் கண்முன் எத்தனையோ அதிசயங்கள் நிகழ்கின்றன. நாமும் உடனிருந்து பார்ப்பதனால் அவற்றின் உண்மையான மதிப்பை நாம் உளங்கொள்வதில்லை. ராமர் காலத்தில் வாழ்ந்த மனிதனுக்கு நம்மளவு ராமபக்தி இருக்குமா என்பது சந்தேகந்தான். இதிகாசமாகவும், காவியமாகவும், சரித்திரமாகவும் உருக்கொண்ட நிகழ்ச்சிகள் காலத்திலே ஊறி இனிமையையும் பெருமையையும் அடைந்திருக்கின்றன. இன்று அச் செய்திகளுக்கும் அவற்றோடு தொடர்புடைய பெரியோர்களுக்கும் உலகத்தார் அளிக்கும் மதிப்பு, அவை நிகழ்ந்த காலத்தில் இருந்திருக்குமா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். கண்முன்னே காணும் ஒன்றில் மனம் ஆழ்ந்து பதிவதில்லை. பழகிய பாலைப்போல அந்தப் பண்டத்தில் புளிப்பு உண்டாகிவிடுகிறது. கருத்தில், கற்பனையில், எதிர்பார்க்கும் ஆர்வத்தில், ஒரு பண்டம் இருந்தால் அதன் கௌரவமே வேறு. கடவுள் கண்காணாப் பொருளாக இருப்பதனால்தான் பெரு மதிப்புக்கு உரியவராக விளங்குகிறார்போலும்!

இன்று ராமர் இல்லை; கிருஷ்ணர் இல்லை; புத்த பகவான் வாழவில்லை; கிறிஸ்து மகான் பேசவில்லை; முகம்மது நபி உயிரோடு இல்லை. ஆனாலும் அவர்க

ளுடைய அபராவதாரம் போன்ற மகாத்மா காந்தி யடிகள் வாழவில்லையா? அந்தப் பெரியாருடைய ஆற்றலால் நம் கண்முன் எத்தனை அதிசயங்கள் நிகழ்ந்து வருகின்றன! நரியைப் பரியாக்குவதும் பரியை நரியாக்குவதும் போன்ற அதிசயங்கள் அல்ல. அவற்றைக் காட்டிலும் கடினமானவை; பலதிறப் பட்ட மக்களின் மனக்குரங்கை அடக்கியாட்டும் அதிசயம்!

காந்தியடிகள் உண்மையை உயர்வாக எண்ணு பவர். அஹிம்சையை வாழ்க்கை நெறியாக உடைய வர். எத்தனையோ சமயாசாரியர்களும் பெரியார்களும் தோன்றி அன்பு நெறியையும் அருள் நெறியையும் வகுத்த நாடு இது. அவர் சொல் நின்ற தேசமாகிய இங்கே மற்றொருவர் சொல் ஆட்சிபெற வேண்டு மாயின் அந்தச் சொல் ஆற்றலுடைய சொல்லாக இருக்கவேண்டும். சொல்லுக்கு ஆற்றல் பொருளால் வருவது. காந்தியடிகளின் சொல் பொருள் நிரம்பியது இருதயத்துக்கு ஒரு பாஷை உண்டென்றால் அது காந்தியடிகளின் சொல்தான். உள்ளமும் உரையும் உடலும் உண்மை நெறியிலே செல்லும் தகைமை யைக் காந்தியடிகள் ஒருவரிடத்திலேதான் காண் கிறோம். அவர் தம் உள்ளத்தே தோன்றியதை என் றும் கரந்து உரையாடுவதில்லை. அவர் வாழ்க்கையே உண்மையின் உருவம். "சத்திய சோதனை" என்று அடிகள் தம் சரித்திரத்திற்குப் பெயர் கொடுத்தா லும், நாம் அதற்குச் "சத்தியத்தின் வெற்றி" என்று திருநாமம் சூட்டிப் போற்றலாம்.

இதுகாறும் உலகில் பல பாகங்களிலே அவ்வக் காலத்து வாழ்ந்த பெரியார்களில் காந்தியடிகளைப்

போலத் தம் காலத்திலேயே உலகெங்கும் பரவிய புகழுடையார் அரியரென்றுதான் சொல்லவேண்டும். இன்று கொள்கை வேறுபாடுகளால் காந்தியடிகளைத் தூற்றும் பகைவர்களும் அவருடைய தியாக உணர்ச்சியையும், உண்மைத்தன்மையையும் போற்றுகிறார்கள். வாய்திறந்து போற்றாவிட்டாலும் அவர்கள் உள்ளத்தில் அடிகளின் மதிப்பு இருக்கத்தான் இருக்கிறது.

உள்ளமறிய உண்மை நெறியில் வாழும் ஒருவர் உலகத்தார் உள்ளத்தில் வாழ்வார் என்பது ஒரு பெரிய உண்மை. இந்த உண்மையை வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

காந்தியடிகள் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளராக இருப்பதற்கே காரணம், அவர் உள்ளத்தால் பொய்யாது ஒழுகுவதுதான்; ஒழுகுவது என்பது திரிகரணங்களையும் ஈடுபடுத்துவது. இந்தக் குறளுக்கு வியாக்கியானம் காந்தியடிகளின் வாழ்க்கை என்று இப்போது சொல்லிவிடலாமே.

காந்தியடிகள் அஹிம்சையையும் உண்மையையும் இருவழிகளாக, இரண்டு மூச்சு நாடிகளாகக் கொண்டு வாழ்பவர். நன்கு வாழ விரும்புவோர், தனி மனிதராயினும், தேசத்தாராயினும், இவற்றை உயிர் நிலையாகக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துபவர். மற்ற இயல்புகளெல்லாம் இவற்றுக்கு இனமாக வருபவைகளே. அஹிம்ஸையும் உண்மையும் நோக்கமாக மனித சமுதாயம் வாழுமானால் போரில்லை, பொறாமையில்லை, வறுமையில்லை, துன்பமில்லை. அவ்

விரண்டினின்றும் வழுவாமல் வாழும் உலகத்தைத் தேடிக்கொண்டு இன்பநிலை தானே வந்து எய்தும்.

அஹிம்சை, உண்மை—இந்த இரண்டையும் மற்ற எல்லாப் பண்புகளிலும் சிறந்தனவாக எடுத்துச் சொல்லும் காந்தியடிகள் உள்ளம், வள்ளுவர் உள்ளத்தின் இக்காலத்து உருவம். திருவள்ளுவரும் அந்த இரண்டு பண்புகளையே யாவற்றினும் சிறந்தனவாக எடுத்துச் சொல்கின்றார். இது பெரிய வியப்பாகத் தோன்றுகிறதல்லவா?

"நீங்கள் நூற்றுக் கணக்கான நீதிகளை அடுக்கிக் கொண்டே போகிறீர்கள். அவ்வளவையும் கடைப்பிடிக்க எனக்கு ஆற்றல் இல்லை. ஏதேனும் ஒன்று, இரண்டு எடுத்துச் சொல்லி, 'இப்படி நட' என்று திட்டமாகச் சொல்லிவிடுங்கள்" என்று ஒருவர் திருவள்ளுவரைக் கேட்டால், அவர் என்ன சொல்வார்? இந்த இரண்டையுந்தான் சொல்கிறார்.

ஒன்றாக நல்லது கொல்லாமை, மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

"ஒன்றுதான் நான் கடைப்பிடிக்க முடியும் என்றால் அதற்கு ஏற்ற நல்ல பண்பு அஹிம்சை; இன்னும் ஒன்று மேற்கொள்வேன் என்றால் உண்மையைக் கடைப்பிடிக்கலாம்" என்பது வள்ளுவர் கருத்து. அன்று வள்ளுவர் மொழிந்த உண்மையே இன்று மகாத்மாவின் மணிவாசகமாக மலர்கிறதென்று கொள்வதில் என்ன பிழை?

காந்தியடிகள் கண்டுபிடித்துத் தந்த ஆயுதம் சத்தியாக்கிரகம். "சத்தியாக்கிரகத்தின் ஆசிரியன் நான்" என்று அடிக்கடி அடிகள் சொல்வதுண்டு. அஹிம்சை முறையில், கொடிய நெஞ்சினர்

உள்ளத்தை வசப்படுத்த ஆற்றும் போர் சத்தியாக்கிரகம்; உண்மையின்பால் உள்ள உறுதியால் நடைபெறுவது இந்தப் போராட்டம்.

சத்தியாக்கிரகத்தின் சிருஷ்டிகர்த்தா காந்தியடிகளானாலும், அதன் வித்து இந்த நாட்டுக்குரிய பரம்பரைச் சொத்து. எதிரியைப் படைகொண்டு பொராமல் பொறுமையாலும் தவத்தினாலும் வெல்லும் செய்தியைப் புராண வரலாறுகளிலே காணலாம். ஆனால் அந்தப் போராட்டத்தைத் தவம் புரிபவர்களும் முனிவர்களும் நிகழ்த்தியதாகப் படிக்கிறோம். காந்தியடிகளோ, "தவமும் தியாகமும் துறவிகளுக்கும் வனவாசிகளுக்கும் மாத்திரம் விதித்தனவல்ல. பிரம்மசரியம் சந்நியாசிகளுக்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல. உண்ணாமை முனிவருக்கு மாத்திரம் உரியதல்ல. அவை இல்வாழ்வாரும் மேற்கொள்வதற்கு உரியனவே" என்று உபதேசிக்கிறார். அவர் ஆணையின் வழி ஒழுகும் சத்தியாக்கிரகத் தொண்டரில் பலர் தியாகிகள்; மனைவியோடு வாழ்ந்தும் பிரம்மசரிய விரதம் காப்பவர்; விருந்துண்ணும் வாய்ப்பிருந்தும் உண்ணாவிரதம் கொள்பவர்கள்.

தவத்தின் இலக்கணம் எதுவோ அதுதான் சத்தியாக்கிரகத்தின் இலக்கணம். துறவறத்தாருக்கே உரியதென்று தனியுரிமை முத்திரை பூண்டிருந்த தவம், இன்று காந்தியடிகளின் உபதேசத்தால் வாழ்க்கைப் போராட்டத்திற்கும் பயன்படுவதாக நிற்கும் பொழுது 'சத்தியாக்கிரகம்' என்ற புதுப் பெயரைப் புனைந்தது.

சத்தியாக்கிரகம் உண்மையும் அஹிம்ஸையும் இணைந்து நிற்பதே. உண்மையைக் குறித்து உறுதி

யாக நின்று, அஹிம்ஸை நெறியில் போராடுவது சத்தியாக்கிரகம். பகைவரால் ஹிம்சைக்கு உள்ளானாலும், அதனை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு எள்ளளவும் ஹிம்சை புரியாமல் போராடுவது சத்தியாக்கிரகம். இதனைக் காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் நிகழ்த்திய சத்தியப் போராலும், அடிகளுடைய நல்லுரையாலும் உணர்ந்துகொள்ளலாம்.

திருவள்ளுவர் தவத்தின் இலக்கணத்தைச் சொல்லும் குறள் ஒன்று உண்டு. அதனையே சத்தியாக்கிரகத்தின் இலக்கணமாகவும் கொண்டுவிடலாம்.

> உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண்
> செய்யாமை
> அற்றே தவத்திற்கு உரு

என்பது அந்தக் குறள். "தனக்கு வரும் துன்பங்களைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்வதும், எந்தப் பிராணிக்கும் அக்காரணத்தாலோ வேறு காரணத்தாலோ துன்பத்தை உண்டாக்காமல் இருப்பதுமாகிய அத்தகைய பண்பே தவத்துக்கு உருவம்" என்பது பொருள்.

"துன்பத்தை ஏற்றுக்கொள்; ஆனால் நீ ஒருவரையும் துன்புறுத்தாதே" என்பதற்கும், "தடியடியை முகமலர்ச்சியோடு தாங்கிக்கொள்; ஆனால் அதற்கெதிரே உன் விரலைக்கூட அசைக்காதே" என்பதற்கும் வார்த்தைகளில் வேறுபாடு இருக்கலாம். கருத்து ஒன்றுதான். முன்னதற்குப் பெயர் தவம்; பின்னதற்குப் பெயர் சத்தியாக்கிரகம். அதைச் சொன்னவர் வள்ளுவர்; இதைச் சொன்னவர் காந்தியடிகள்.

"அவள்"

தன் ஆருயிர்த் தமையனைத் தேடிக்கொண்டு தமரோடும் படையோடும் புறப்பட்ட பரதன் கங்கைக் கரையில் உள்ளந் தூயவனுகிய குகனைச் சந்திக்கின்ருன். ராமன்மேல் நிமிர்ந்த காதலுடைய அவ்விருவருடைய சந்திப்பைக் கூறும் குகப்படலம் உணர்ச்சி ததும்பும் அழகிய சித்திரம். உள்ளம் உருக்கும் பல அருமையான கவிகளை அப்படலத்திலே காணலாம். குகனுடைய உணர்ச்சி மிக்க காதலும், பரதனுடைய ஆழ்ந்தடங்கிய பேரன்பும் அப்படலத்தில் யமுனையும் கங்கையும்போலப் பெருக்கெடுத்து ஓடுகின்றன. கம்பருடைய வாக்கிலே ஒரு தனியான அழகும் ஆற்றலும் பொலிகின்றன. கம்பர், பாத்திரங்களின் கூற்ருகப் பல செய்திகளை அமைப்பதோடு, பரதனைப் புகழ்ந்தும் கைகேயியை இகழ்ந்தும் சில பகுதிகளைத் தம் கூற்ருகவே அமைத்திருக்கிருர்.

பரதன், ராமபிரான் எங்கே படுத்திருந்தான் என்பதைக் கேட்கிருன். குகன் அவ்விடத்தைக் காட்டுகிருன். தருப்பைப் புல் மெத்தையில் கல்லைத் தலையணையாக வைத்து வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளியைக் கண்டு பரதன் துக்கக் கடலில் முழுகி முழுகி எழுகிருன். பிறகு லக்ஷ்மணன் எங்கே படுத்திருந்தான் என்று வினவியபொழுது, குகன் சொல்கிருன் :

"அல்லைஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லைஊன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்,
கல்லைஆண்டு உயர்ந்த தோளாய்,
கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்;
இமைப்பிலன் நயனம்" என்றான்.

ராமபிரானும் சீதா பிராட்டியும் துயிலும் பொழுது, லக்ஷ்மணன் தூங்காமல் விடிய விடிய நின்றுகொண்டிருந்தானாம். வில்லை ஊன்றிப் பிடித்த கை, இடையிடையே பெருமூச்சு - இந்த நிலையில் அந்த வீரன் நின்றுகொண்டிருந்தான். கண்கள் தாரை தாரையாக நீர்சொரிய, இரவு முழுதும் இமைகொட்டாமல் நின்றுகொண் டிருந்தானென்று குகன் சொல்கிறான். இரவு முழுவதும் இமைகொட்டாமல் ராமபிரானையும் சீதையையும் பாதுகாத்துக்கொண்டு லக்ஷ்மணன் தூங்காமல் இருந்தானென்று சொல்லும் குகன் என்ன செய்தான்? யாவரையும் பாதுகாத்துக் கொண்டு அவனும் தூங்கவில்லை.

மேலே சொன்ன பாட்டில் 'ராமபிரானும் சீதா பிராட்டியும் துயிலும்போது' என்ற பொருளைத் தருவது,

அல்லைஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச

என்ற முதல் அடி. 'இருளை ஆட்சிகொண்டு கருமை பொருந்திய திருமேனியில் இணையற்ற அழகுடையவனாகிய இராமபிரானும் அவளும் துயிலும் போது' என்பது இதன் பொருள். ராமபிரானை,

'அல்லே ஆண்டு அமைந்த மேனி அழகன்' என்று ஐந்து சொற்களால் வருணித்த கவிஞர், பிராட்டியை 'அவள்' என்ற சுட்டுப் பெயராலே குறித்துச் செல்கின்ருர். இது நியாயமா? காவிய நாயகனுடைய பெருமைகளுக்குக் குறைவில்லாத சிறப்பைப் பெற்ற காவிய நாயகியை இப்படிச் சொல்லி விட்டுவிடுதல் காவிய கதிக்கு இழுக்கல்லவா? அழகி என்றுகூடச் சொல்லவில்லேயே!—இப்படி முதலில் தோன்றுகிறது நமக்கு.

இந்தப் பாட்டு, கவியின் கூற்ருக அமைந்தது அல்ல; குகனுடைய வார்த்தையாக வருகிறது. சிறந்த நாடகக் கவிஞராகிய கம்பர் கதா பாத்திரங்களின் கூற்றுக்களில் அவர்களுடைய உள்ளத்தை வெளிப்படுத்திச் சிறந்த உயிரோவியங்களேச் சிருஷ்டிப்பதில் இணையற்றவர். ஒரே நிகழ்ச்சி நிகழும்போது, தத்தம் குண வேறுபாடுகளாலே வெவ்வேறு விதமான உணர்ச்சிகளே வெளியிடும் முரண்பட்ட பாத்திரங்களே ராமாயணத்தில் நாம் காணுகிறேம். கவிஞர் அவ்வளவு பாத்திரங்களின் குணங்களேயும் ஒன்றேடு ஒன்று கலக்காமல், தத்தம் சிறப்பியல்புகளே வெளிப்படுத்தும் சொல்லும் செயலும் நிகழுமாறு கதைப் போக்கில் அமைத்துக் காட்டுகிருர்.

இந்த ரீதியில் குகனுடைய கூற்ருகிய இதில் அவனது தூய உள்ளம் குறிப்பாகத் தெரியும்படி கம்பர் அமைத்திருக்கிருர்.

குகன் நாவாய் வேட்டுவனுனலும், காட்டில் வாழும் வாழ்க்கையை உடையவனேயானுலும், உள்ளத்தால் அவன் தூயவன். அவனுடைய உள்ளச் சிறப்பையும் அன்பையும் நன்குணர்ந்தே ராமபிரான்

அவனைத் தோழனாகக் கொண்டான்; இயல்பாகத் தன்னுடன் பிறந்த சகோதரர்களோடு மற்றொரு சகோதரனாக ஏற்றுக்கொண்டான். அதற்குரிய தகுதி குகனிடத்தில் உண்டென்பதே ராமனது எண்ணம்.

சிறிது கதையைப் பின்னாலே புரட்டிப் பார்க்கலாம். ராமனும், லக்ஷ்மணனும் சீதையைப் பறிகொடுத்து விட்டுத் துயர்க்கடலில் ஆழ்ந்து காட்டில் நடந்து செல்கிறார்கள். கிஷ்கிந்தைக்கு வந்தபோது அநுமான் எதிர்ப்படுகிறான். சீதா பிராட்டி ராவணனால் தூக்கிச் சொல்லப்பட்டபொழுது தன் அணிகளைக் கழற்றி முடிந்து தான் சென்ற வழியின் அடையாளம் தெரியவேண்டிக் கீழே போட்டாள். அந்த முடிச்சுகளை யெல்லாம் கிஷ்கிந்தைவாசிகளாகிய குரங்குகள் பொறுக்கி எடுத்து அநுமனிடம் தந்தன. அநுமன் ராமபிரானைக் கண்டு பேசி அவனது நிலையை உணர்ந்தான். ராமன், "யார் கொலோ இச் சொல்லின் செல்வது?" என்று மிகவும் வியப்படைந்தான். இருவரும் பழக்கம் செய்துகொ கொண்ட பிறகு சீதாதேவியின் அணிகளை அநுமன் ராமனுக்கு முன்னர் எடுத்துவைக்க, அவற்றைக் கண்ட அவன் மிகவும் வருத்தமுறுகிறான். தன் கண்ணீரினால் அவற்றைக் கழுவிச் சீதாபிராட்டியையே கண்டதுபோன்ற உணர்ச்சியில் பலவாறு புலம்புகிறான்.

இந்தக் கட்டத்தில் வால்மீகி ஒன்று சொல்கிறார். அணிகலன்களைக் கண்ட ராமன் ஒருவாறு ஆறுதல் பெற்று அவற்றைத் தன் இளையவனுக்குக் காட்டி, "தம்பி, பார்த்தாயா? உன் மதனியின் ஆபரணங்கள் அல்லவா? தெரிகிறதா?" என்று கேட்கிறான். லக்ஷ்மணன், அவற்றை ஒவ்வொன்றாகப் பார்த்து விலக்கிக்

கொண்டு வந்தவன், சிறடிச் சிலம்பினைக் கண்டதும், "அண்ணு, இது பிராட்டியின் அணிகலம் என்பது நிச்சயம்" என்ருனும். அன்னையென எண்ணித் தொண்டாற்றும் தூய உள்ளம் படைத்தவனுனுலும், லக்ஷ்மணன் பிராட்டியை நிமிர்ந்து பார்த்ததில்லை. அவளுடைய திருவடி ஒன்றையே நோக்கிப் பணி புரிந்தவனுகையால் சிலம்பு மாத்திரம் அவனுக்குத் தெரிந்த அணிகலமாயிற்று. திருமேனியைக் கண்ணெடுத்துப் பார்த்து அறியாதவன் ஆதலின் மற்ற ஆபரணங்களை அடையாளம் கண்டுகொள்ளும் திறமை அவனுக்கு இல்லை.

இந்த உயர்ந்த இயல்பைத் திருவள்ளுவர் 'பேராண்மை' என்று திருக்குறளில் பாராட்டுகிருர்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ருேர்க்கு
அறனென்ருே, ஆன்ற ஒழுக்கு.

பகைவரை அடக்கும் ஆற்றல் ஆண்மை; பிறன்மனை நோக்காமல் மனத்தை அடக்கி நிறுத்தல் பேராண்மை. இந்தப் பேராண்மை உடைய லக்ஷ்மணன், சீதா பிராட்டியைப் பிறன்மனை யென்றமைபற்றி நோக்குதல் ஒழிந்தனன்.

பலநாட்கள் உடன் இருந்து பணி செய்துவந்த லக்ஷ்மணனே பிராட்டியின் திருமேனியைப் பார்க்க வில்லை; ராமனுக்கு இளையானும் பேறுபெற்ற தூய உள்ளத்தானுகிய குகன் ஓரிரவுப் பொழுதே ராமனேடு பழகியவன். சீதாபிராட்டியின் திருமேனியைப் பாராத இயல்பு அவன்பாலும் இருந்தது. அவனும் லக்ஷ்மணனைப் போன்ற பேராண்மையை உடையவனே.

ராமபிரானைக் கண்கொண்டு அடிமுதல் மு
வரை நோக்கி அம்மேனி யழகிலே ஈடுபட்ட வன் குக
ஆகையால் அவ்வழகுக் கோலத்தைப் பாராட்டு
பண்புடையவனுனன். "அல்லை யாண்டு அமைந்
மேனி அழகன்" என்று கண்ணுற் கண்ட பேரழ
வாயார வருணிக்கின்ருன். அத்தகைய அழக
துயிலும்போது அருகே நிழல்போலத் தொடர்ந்
வந்த சீதை துயில்வதைக் குறிப்பால் உணர்ந்தானே
யன்றி அப்பிராட்டியின் திருமேனியை ஏறிட்டு
பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அல்லவோ அ
வழகை வருணிக்க முடியும்? எனவே, "அல்லை ஆண்
அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச" என்
மாத்திரம் சொல்லித் தன் பேராண்மையைப் புல
படுத்துகின்ருன்.

இந்தத் தூய்மை குகனிடம் உள்ளதென்பன
லக்ஷ்மணன் முதலிலேயே உணர்ந்து கொண்டான
போலும்! "பாம்பறியும் பாம்பின் கால்" அல்லவா
அதனுல்தான் குகன் ராமனைப் பார்க்க வந்தபோ
அவன் வரவைச் சொல்லப்புக்க லக்ஷ்மண
ராமனிடம்,

"உள்ளந் தூயவன்"

என்று பாராட்டுகின்ருன்.

* * * *

'பிறன்மனை நோக்காத பேராண்மை'யை
விளக்கும் நிகழ்ச்சிகளை வேறு தமிழ் நூல்களிலு
காணலாம். மணிவாசகர் இயற்றிய திருக்கோவை
யாரில் ஒரு காட்சி வருமாறு:—

ஒரு காதலி தன்னைக் காதலித்த காதலனுட
தன் உறவினர் அறியாமல் புறப்பட்டு விடுகிருள். த

காதலனை மருமகனாகத் தன் தாய் தந்தையர் ஏற்றுக் கொள்ளமாட்டார்களோ என்ற ஐயம் உண்டாகவே, அவள் அவனுடன் சென்று அவன் ஊரிலே மணம் செய்து கொள்ளலாம் என்று துணிந்துவிடுகிறாள். அவ்விளங் காதலனும் காதலியும் ஒரு பாலைவனத்தின் வழியே போகிறார்கள்.

இங்கே வீட்டில், அந்தப் பெண்மகளைக் காணாமல் தாய் முதலியோர் வருந்துகின்றனர். அவளை வளர்த்த செவிலித்தாய், "நான் அவளைத் தேடிக் கொணர்வேன்" என்று சொல்லித் தன் தளர்ச்சியையும் நோக்காமல் புறப்பட்டு விடுகிறாள்.

நீண்டு பரந்த பாலை நிலத்தில் தள்ளாடித் தள்ளாடி வருகிறாள். நெடுந் தூரத்தில் யாரோ இரண்டு பேர், ஒரு பெண்ணும் ஓர் ஆடவனும், வரும் தோற்றத்தைக் கண்டு அவள் தன் மகளும் அவள் காதலனுந் தான் மீண்டனரென்று உவக்கின்றாள். அவர்கள் அருகில் வந்தபோது அவள் ஏமாந்து போகிறாள்; அவர்கள் வேறு ஒரு மடமங்கையும் அவள் காதலனுமாக இருக்கிறார்கள். அவள் உள்ளம் தளர்ந்தாலும், உரை தளராமல், "உங்களைக் கண்டு, என் மகளும் அவள் காதலனும் இருக்கிறமாதிரியே இருப்பதைப் பார்த்து, அவர்களே வந்துவிட்டார்கள் என்று மகிழ்ந்தேன். இந்தக் காதற் சிறப்போடே இருவர் உங்கள் எதிரே போயினரோ?" என்று கேட்கிறாள்.

அந்தக் காதலன் விடை சொல்லத் தொடங்குகிறான். "பெரும்பற்றப் புலியூராகிய சிதம்பரத்தில் என்னை ஆட்கொண்டருளிய நடராஜப் பெருமானுக்கு உரிய மலையில் உள்ள சிங்கத்தைப் போன்ற தோற்றத்தையுடைய ஒரு காளையைக் கண்டேன்.

அவனுக்கு அயலில்........" மேலே பேச்சை முடிக்கத் தெரியவில்லை. "அயலில் உன் மகள் சென்ருள்" என்று அவன் சொல்வானென்று மிக்க ஆவலோடு எதிர்பார்க்கிருள் கிழவி. அவனே அந்த விஷயம் வரும்போது தன் பேச்சை நிறுத்திவிடுகிருன்.

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றன்வ' ஆகையால் அவன் அந்த ஆடவனைத்தான் பார்த்தான்; அருகே வந்த மடமகளைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அல்லவா அவளும் உடன் வந்தாளென்று சொல்ல முடியும்?

சொல்லாமல் இருந்தால் கிழவி ஏமாந்து போவாளே! அவள் ஆவலைத் தீர்க்க வேண்டுமே; அதற்கு வழி என்ன? "அயலே...." என்று நிறுத்தின வன் உடனே தன் காதலியைப் பார்த்து, "தூண்டா விளக்குப் போன்றவளே, இந்த அம்மை சொல்கிற தைக் கேள்; என்ன அது?" என்று குறிப்பாக அவளை விடை சொல்லும்படி ஏவுகிருன். அவனுடைய வார்த்தையில் அவனது பேராண்மையும், கடமை உணர்ச்சியும், நாகரிகப் பண்பும் மலிந்து விளங்குகின்றன. பாடல் வருமாறு:

மீண்டார் எனஉவந் தேன்கண்டு நும்மைஇம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயினரோ?-புலியூர் எனைநின்று
ஆண்டான் அருவரை ஆளியன் ஞனேக்கண்டேன்; அயலே-
தூண்டா விளக்கனை யாய்,என்னை யோஅன்னை
சொல்லியதே?

இத்தகைய தமிழ் நூல் மரபுகளை யெல்லாம் உணர்ந்த கம்பர், "அவள்" என்று குகன் பிராட்டியைச் சுட்டும் வார்த்தையில், அவனுடைய பேராண்மையைக் குறிப்பினுல் புலப்படுத்துகின்ருரென்றே கருதுகிறேன்.

கம்பரைப்பற்றிய பழமொழிகள்

ஒரு நாட்டின் இலக்கிய வரலாற்றில் பழமொழிக்குத் தனியிடம் உண்டு. தமிழிலோ தொல்காப்பியரே 'முது சொல்' என அதைக் கூறி, அதைத் தனியே ஓர் இலக்கிய வகையாக்கினர். ஜனங்களின் உள்ளத்தே காலப்போக்கிலே உண்டாகும் நிகழ்ச்சிகள் ஊறி ஊறிப் பழமொழிகள் பிறக்கின்றன. அவற்றில் சரித்திரம் இருக்கும்; கவிதை நயம் உண்டு; கலைத் திறம் உண்டு; சிறந்த வேதாந்த உண்மைகளையும் காணலாம்.

தமிழர் பழமொழிகளைத் தனியே போற்றி வந்ததோடு தமிழ்ப் பாடல்களிலும் பதித்து அழகு செய்தனர். சங்க காலத்து நூல் வரிசையாகிய பதினெண் கீழ்க்கணக்கில் 'பழமொழி' என்றே ஒரு நூல் இருக்கின்றது. அதில் நானூறு பழமொழிகள் நானூறு வெண்பாக்களில் பதித்து வைக்கப்பட்டுள்ளன. பிற்காலத்திலும் 'தண்டலையார் சதகம்' என்ற நூலில் செய்யுள்தோறும் பழமொழியைக் காணலாம். அதற்குப் பழமொழி விளக்கமென்று ஒரு பெயரும் உண்டு. கோவிந்த சதகம், இரத்தினசபாபதி மாலை முதலிய சிறு நூல்களில் பழமொழிகள் பல அமைந்துள்ளன.

பழமொழிகள் உயிருள்ள இலக்கியம்; தமிழ் நாட்டார் அனைவரது மனத்திலும் பட்டு ஊன்றிய செய்தி பழமொழியாகப் பரிணமிக்கிறது.

கம்பர் தமிழ்நாட்டுப் பெரும் புலவர். அவருடைய புகழ் தமிழ் நாட்டிற் பரவி நிலைத்துவிட்டது. அவரைப் பற்றிய செய்திகள் சில பழமொழியாயின.

இலக்கண நூலுரைகளிற் கம்பரைப் பற்றிய ஒரு பழைய வாக்கியம் உதாரணமாகக் காணப்படுகின்றது. "கல்வியிற் பெரியன் கம்பன்" என்பது அது. 'கம்பர் பல நூல்களைப் படித்தவர், கல்விக்கு உரையாணியாக இருந்தவர்' என்ற ஞாபகம் தமிழர்களுக்கு இருந்து வந்த தென்பதை அப்பழமொழியால் உணரலாம். பழைய தமிழ் நூல்களை நன்ருகக் கற்று அறிந்ததோடு, வால்மீகி ராமாயணத்தையும் வேறு ராமாயணங்களையும் கேட்டு அறிந்தவர் அவர்.

"மும்மைத் தமிழுணர்ந்த முதியோரும் மற்றுளோரும், முரலாற்றுங் கடற்பாரிற் கம்பசூத் திரமுது சொல் மொழிவர்" என்பது ஒரு பாட்டு. இதில் 'கம்பசூத்திரம் என்னும் முதுசொல்லை முதியோரும் மற்ருேரும் கூறுவர்' என்ற செய்தி காணப்படுகின்றது. சூத்திரமென்பது சில எழுத்துக்களால் பல்வகைப் பொருள்களைச் செறித்து நுட்பமாகக் கண்ணுடியைப் போல் காட்ட வல்லதென்று இலக்கண நூல் கூறும். கம்பரும் தமது விரிந்த மனேபாவத்தைச் சுருங்கிய உருவத்திலே அமைப்பவர். ஆயுந்தொறுந்தொறும் அப்பொருள் விரிந்துகொண்டே போகும்.

"கம்ப சித்திரம்" என்பது ஒரு பழைய வழக்கு. கண்ணிஞற் காணும் பொருளை ஓவியப் புலவன் தீட்டுவதுபோலக் கருத்திஞற் காணும் பொருளைக் காவியப் புலவன் தீட்டுகிருன். தனது ராமாயணப் பெருங் காவியத்திலே கம்பன் அமைத்துள்ள உயிரோவியங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்பது ஒரு பழமொழி. மனிதனுக்கும், மரத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம். இலக்கணம் மனிதனை ஆறறிவுடையவனென்றும், மரத்தை ஓரறிவுடையதென்றும் கணக்குச் சொல்கிறது. அந்த மரங்கூடத் தன் ஓரறிவையும் பசுமையையும் இழந்துவிட்டால் வெறுங் கட்டையாகிவிடுகிறது. அதிலே ஜீவன் இல்லை; வளர்ச்சியில்லை. அந்தக் கட்டைக்குக்கூடக் கவியின் அம்சம் வந்துவிடுகிறதாம்! இரும்பிலே மின்சாரம் பாய்ந்ததுபோலக் கட்டையிலே கவித்துவம் பாய்கிறதாம். பழமொழியின் வார்த்தைகளுக்கு அப்படியப்படியே பொருள் கொள்வது அபாயம். கம்பர் இருந்த இடமுழுவதும் கவிதையாகிய மின்சாரம் பாய்ந்திருக்குமென்பதே கருத்து. அவர் வீட்டு வேலைக்காரிகூடப் பாடியிருக்கிறாள்.

'கம்பர் போன வழி' என்பது ஓர் அழகிய பழமொழி. அதற்கு இரண்டு வகையாகப் பொருள் சொல்வார்கள். கம்பர் கவிச்சக்கரவர்த்தி. அவர் வகுத்த நெறி தமிழர்களுக்குச் சிறந்த சட்டம். இலக்கணத்துக்கு அவர் கட்டுப்பட்டவர் அல்லர். அவர் செல்லும் மார்க்கமே இலக்கணமாகிவிடும். 'கம்பர் போன வழி' என்ற இப் பழமொழி அவரது தனித் தலைமையைக் காட்டுகின்றது.

மற்றொரு வகையாக இப்பழமொழிக்குப் பொருள் கூறுவதுண்டு. அந்தக் காலத்தில் கம்பர் எங்கே சென்றாலும் அவரோடு நூற்றுக்கணக்கான மனிதர்கள் கூடியிருப்பார்களாம். அவருடைய தரிசனத்திற்காகவும், அவர் பேச்சைக் கேட்பதற்காகவும் எவ்வளவோ பேர் ஆவலாக வந்து கூடுவார்கள். ஓர் ஊரிலிருந்து

மற்றோர் ஊருக்கு அவர் செல்லும்போது ஒரு பெரிய கூட்டம் அவரைத் தொடருமாம். அந்தக் காலத்தில் அழகிய பாதைகள் இல்லை. அந்தக் கூட்டம் செல்லும் போது வழியிலுள்ள விளை நிலங்களில் விளைந்த பயிர்களை மிதித்துக்கொண்டு செல்ல நேரும். அதனால் அந்த நிலங்களை உடையவர்களுக்குச் சிறிது நஷ்டம் உண்டாகும். வழக்கப்படி அவர்கள் நிலத்திற்குரிய வரியை வாங்கும் அதிகாரிகள் கம்பர் போன வழியில் இருந்த நிலங்களில் உண்டான நஷ்டத்தை அறிந்து, அதற்குரிய வரியின் பங்கைக் கழித்துவிடுவார்களாம்; கணக்கில் 'கம்பர் போன வழி கண்டு கழித்தது' என்று எழுதி விடுவார்களாம். தமிழ் நாட்டாருக்குக் கம்பரிடத்தி லிருந்த பித்து இதனால் வெளியாகிறது.

'தமிழுக்குக் கதி இருவர்' என்று சிலர் கூறுவர். தமிழ்ப் பாஷையின் பெருமைக்கு முக்கிய காரணமானவர்கள் இருவரென்பது அவர்களுடைய கருத்து. அவ்விருவர் யார்? கம்பர், திருவள்ளுவர் என்னும் இருவருடைய பெயர்களின் முதலெழுத்தும் சேர்த்தால் கதி என அமையும். தமிழுக்குத் கதியாக நிற்பவர் கம்பரும் திருவள்ளுவரும் என்ற பொருள் குறிப்பாக அதில் அமைந்திருக்கிறது. பாரதியாரும்,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை
உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை

என்று தாம் கூறும் மூன்று புலவர்களில் முதல் இரண்டு ஸ்தானத்தை இவர்களுக்குத்தானே கொடுக்கிறார்?

கட்டில்லாக் கவிதை

இயற்கைத் தேவியின் செல்வங்களெல்லாம் ஒருங்கு குவிந்த இடமோ அது? பூமகளின் வளம் புடைத்துத் தோன்றும் அடையாளமோ? வறப்பினும் வளந்தரும் வண்மையையுடைய மலையிலே கிடைக்காத பொருள் என்ன இருக்கிறது? 'பஹு குடும்பியாயிருப்பார் ஒரு மலைச்சாரலைப் பற்றியிருக்குமாப் போலே' என்று வைஷ்ணவ வியாக்கியானக்காரர்கள் எழுதுவதுபோல பெரிய பெரிய குடும்பங்களை யெல்லாம் தாங்கிச் செழிக்க வைக்கும் மலைகள் தமிழ் நாட்டுக்கு அணி செய்கின்றன. தமிழன் அவற்றின் பெருமையைத் தெரிந்துகொண்டவன். நாட்டுக்கு அழகு மலை; நாட்டுக்கு அரணும் மலை என்று தமிழர் அரசியல் நூல் கூறுகின்றது. அது மட்டுமல்ல; தமிழன் தன்னுடைய இலக்கண நூலிலேயே மலைகளுக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுத்திருக்கிறான். அங்கேதான் அவனுடைய காதல் நாடகம் தொடங்குகிறது. அங்கேதான் தமிழ்த் தெய்வத்துக்குக் காணியாட்சி இருக்கிறது. குறிஞ்சி என்ற அழகிய பெயராலே மலையையும் மலையைச் சார்ந்த இடத்தையும் குறிப்பிடும் வழக்கமுள்ள தமிழன், தன் இலக்கியத்திலே சிறந்த அகப்பொருளின் முதல் திணையாகக் குறிஞ்சியைத் தான் வைத்திருக்கிறான்.

குறிஞ்சி நிலம் இயற்கை யழகு குலுங்கும் இடம். இன்பம் பொங்கிப் பூரிக்கும் இடம். கவிஞர் வருண

னைக்கு மிகவும் ஏற்ற இடம். குறவரும் குறத்தியரும் முருகனை வழிபட்டுக் குரவைக் கூத்தாடி மலையருவியில் குதித்துத் தினைக்கொல்லையில் காதல் புரிந்தும் மலைச் சாரலில் இன்புற்றும் வாழும் அரங்கம் அது. இயற்கைத் தேவியின் முதற்பிள்ளைகள் வாழும் இடம் அது என்றுகூடச் சொல்லலாம். இன்றும் காடுகள் அடர்ந்த மலைகளிலே வாழும் சாதியினர், நம்மைப் போன்ற நாகரிகம் இல்லாதவர்களென்று நாம் சொன்னாலும், உள்ளத் தூய்மையும் அதிக ஆசையின்மையும் உடையவர்களாக வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை சின்னஞ்சிறு குருவியினுடைய வாழ்க்கையைப் போன்றது. வாழ்க்கைக்குரிய தேவைகளோ மிகக் குறைவு. அவைகளும் எளிதிலே கிடைத்து விடுகின்றன. ஆகவே, அவர்களுடைய வாழ்க்கையிலே சிரமம் இல்லை. சோற்றுக்காக அடிமை வாழ்வு வாழ வேண்டியதில்லை. ஒரு வருஷத்துக்கு வேண்டுமென்று முன்கூட்டி முயற்சிசெய்து உணவுப் பண்டங்களைச் சேமித்து வைப்பதும், அவற்றைப் பிறர் கண்ணிலே படாதபடி பாதுகாப்பதும், ஐயோ குறைந்து போயிற்றே என்று அழுங்குவதும் ஆகிய சங்கடங்கள் அவர்களுக்கு இல்லை.

அவர்களுடைய உல்லாஸ வாழ்க்கையிலே கணந்தோறும் இன்பம் கொப்புளித்துக் குமிழியிடுகின்றது. மகளிரும் ஆடவரும் கலந்து பழகித் துள்ளித் திரிந்து இயற்கையோடு இயற்கையாகப் பழகுகிறார்கள். வானவர்களும் கண்டு பொறாமைப்படும் இன்ப வாழ்க்கையில் அவர்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்.

தினையும் தேனும் கனியும் கிழங்கும் தசையும் அவருடைய உணவுகள். தினைதான் அவர்கள்

விளைக்கும் பயிர். விளைந்த தினையைக் குத்திச் சமைத்து உண்பார்கள். பெண்கள் வெறும் பாறையிலே தினையைப் போட்டு யானைத் தந்தத்தை உலக்கையாகக் கொண்டு குத்துவார்களாம். தினை நெல்லோடு மூங்கில் நெல்லையும் குத்துவதுண்டு.

நாலு பெண்களாகச் சேர்ந்து குத்தும்போது அவர்கள் இனிய பாடல்களைப் பாடுவார்கள். அதற்கு வள்ளைப்பாட்டு என்று பெயர். அந்தப் பாட்டு நெடுந் தூரம் கேட்குமாம். வீட்டிலே உள்ள கோழி அந்தப் பாட்டைக் கேட்டு அப்படியே தூங்கிப்போய் விடுமாம்.

கோழியும் கேட்டு உறங்குமென்றால் அதில் எத்தனை இன்பம் இருக்கவேண்டும்! அவ்வளவு கவர்ச்சியுள்ள அந்த உலக்கைப் பாடல் யார் இயற்றியது? அது எந்த மாதிரி பாட்டு?

மலைதோறும் வாய்மொழியாக வந்த பாட்டு அது. அதை இலக்கணம் அறிந்த புலவன் யாரும் இயற்றவில்லை. நாடோடியாக வழங்கும் அந்தப் பாட்டிலே இனிமை இருக்கிறது; தாளம் இருக்கிறது; ஜீவன் இருக்கிறது. ஆனால், நாம் வாசிக்கிற புலவர்களின் பாடல்களில் காணும் அலங்காரங்கள் இல்லை; ஆழமான பொருட் சிறப்பு இல்லை; செய்யுள் இலக்கணம் இல்லை; சங்கீதக் கட்டுப்பாடு இல்லை.

அந்தப் பாட்டைப் பாடும் மகளிர் எப்படி இருக்கிறார்கள்? நம்மைப்போல அடிமுதல் நுனிவரையில் ஆடைகளைப் புண்ணுக்குச் சுற்றுவதுபோலச் சுற்றிப் பூட்டுப் பூட்டுவதுபோலப் பல ஆபரணங்களை அணிகிறார்களா? நினைத்தபொழுதெல்லாம் சர்க்கரைக்கும் நெய்க்கும் மாவுக்கும் செலவு வைத்துச் சிற்றுண்டி

களைத் தின்று வியாதியை வருவித்துக் கொள்கிறார்களா? எடுத்ததற்கெல்லாம் பிறர் உதவியை வேண்டி நிமிஷத்துக்கு ஒருதடவை ஒருவருக்கு அடிமையாகி நிற்கிறார்களா?

நம்முடைய வாழ்விலேதான் எத்தனை சிறை! எத்தனை கட்டு! உடம்புச் சிறைக்குள் உயிர் இருந்து தத்தளிக்கிறதே; அதற்குமேல் அந்த உடம்புக்கு மட்டற்ற உடைச் சிறையிடுகிறோம். உடம்பின் சுகத்துக்கு மருந்துச் சிறையிடுகிறோம். வீடென்றும் அறையென்றும் பெயருள்ள சிறைகளிலே புகுந்துகொண்டு காற்றையும் கதிரொளியையும் தீண்டாச் சாதியாக்கி விடுகிறோம். பேச்சுக்குக் கட்டு, செயலுக்குக் கட்டு, நினைப்புக்குக்கூடக் கட்டு!

மலையிலே காற்றோடு கருத்தை அலையவிட்டு, அருவியோடு உடலை மிதக்கவிட்டு, மலரோடு கண்ணை மணக்கவிட்டு, இன்பத்தோடு வாழ்க்கையைப் பிணையவிட்டு இயற்கைக் குழந்தைகளாக வாழும் குறவர் குறத்தியர் வாழ்க்கையிலே இந்தச் சிறைகள் ஏது? கட்டில்லாத வாழ்வு அவர்கள் இன்ப வாழ்வு! அவர்கள் செயல்கள் கட்டில்லாத செயல்கள்; பிறருடைய அதிகாரத்துக்கு அடங்கி அடிமைப்பட்டார் செய்யும் செயல்கள் அல்ல. அவர்கள் வார்த்தைகள் கட்டில்லாமல் உள்ளத்துள் பொங்கியெழும் களிப்பை வெளியிடும் கட்டில்லா உரை. அவர்கள் பாட்டுக்களோ கட்டில்லாக் கவிதை!

அவர்கள் வாழ்க்கையிலே இன்பம் இருக்கிறதென்பதை யாராவது மறுக்கமுடியுமா? அப்படியானால், அவர்கள் பாடும் பாடலிலே, அந்தப் பாடலின் சாகித்தியமாகிய கவிதையிலே இன்பம் இல்லை

யென்று சொல்வது மாத்திரம் எப்படி நியாயமாகும்? விடுதலை மணக்கும் பாடல் அது இயற்கையோடு கலந்து காற்றே சுருதியாகவும், உலக்கையாற் குத்தும் போது உண்டாகும் ஒலியே தாளமாகவும் வருவதல்லவா? எத்தனை அழகான, இனியாமையான, பாட்டாக இருக்கவேண்டும் அது!

"தினைகுறு மகளிர் இசைபடு வள்ளையும்" என்று ஒரு சங்கப் புலவர் அந்தப் பாட்டைப் பாராட்டுகிறார். 'தினையைக் குத்தும் மலையிலுள்ள பெண்கள் இசையோடு வரும்வள்ளைப் பாட்டு' என்பது அதன் அர்த்தம்.

அவர்கள் பாடிய பாடல்களைப் புலவர்கள் கேட்டிருக்கிறார்கள். கேட்டு மகிழ்ந்து அவற்றைப்பற்றித் தங்கள் நூல்களிலே சொல்லி யிருக்கிறார்கள். அந்த மாதிரி தாங்களே பாடியும் இருக்கிறார்கள். ஆனால் புலவர்கள் அப்படிப் பாடிய பாடல்களில் அவர்கள் புலமை மணக்கிறது; செயற்கை யழகுடையவை அவை என்றுதான் சொல்லவேண்டும். ஓர் உதாரணம் பார்க்கலாம்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உலக்கைப் பாட்டுக்களை மகளிர் பாடுவதாக அமைத்திருக்கிறார்: அவற்றில் ஒன்று வருமாறு:

தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பாவைமார் ஆலிக்கும் பாடலே பாடல்!

[அவைப்பார் - குத்துவார். புகார்-காவிரிப்பூம்பட்டினம். ஆழி - ஆக்ஞா சக்கரம். செம்பியன் - சோழன்,

வம்பு - மணம். பாழி - பருமை. ஆலிக்கும் - ஆரவாரிக்கும்.]

காவிரிப்பூம்பட்டினத்து மகளிர் பாடிக்கொண்டு குத்துகிருர்களாம். மலர்கள் நிறைந்த காஞ்சிமரத்தின் நிழலில் புகார் நகரத்துப் பெண்கள் கூடுகிருர்கள். இனிய கரும்பை உலக்கையாகக் கொண்டு செழுமையான முத்துக்களை அரிசியைப்போல இட்டுக் குத்துகிருர்கள். குத்தும்போது அவர்கள் பாடும் பாட்டு, காவிரிப்பூம்பட்டினத்தில் அரசாட்சி புரியும் சோழ அரசனது புகழைச் சொல்கிறதாம். ஆக்ஞா சக்கரத்தையும் திண்ணிய தேரையும் உடைய சோழனுடைய நறுமணம் பரவிய மாலையை அணிந்த விசாலமான பருத்த மலைபோன்ற தோளைப் புகழ்கிருர்களே, அந்தப் பாடல்தான் சிறந்த பாடலாம்; அந்தப் பாவைமார் ஆரவாரிக்கும் பாடலே பாடலாம்.

பாட்டு அழகாக இருக்கிறது. கரும்பும், முத்தும் நாட்டின் வளப்பத்தைக் காட்டுகின்றன. சோழன் புகழைப் புலவர் ஞாபகப்படுத்துவதும் நன்ருக இருக்கிறது. ஆனல் இந்தப் பாட்டில் உரல் இல்லை, உலக்கை இல்லை; நெல்கூட இல்லை. எல்லாம் நாடகத்திலே வேஷம் போட்டுக்கொள்கிற மாதிரி உலக்கையின் ஸ்தானத்திலும் நெல்லின் ஸ்தானத்திலும் பாவனையாகச் சில பொருள்களை வைத்திருக்கிருர்கள். அடடா! மூலமே வேஷந்தானே! அதை மறந்துவிட்டோமே. இங்கே மகளிரே இல்லை. அவர்களும் கற்பனை உருவங்களே! இளங்கோவடிகளே மகளிரையும் பாவனை செய்து இந்தப் பாட்டையும் கற்பனையாகப் பாடியிருக்கிருர். இதைச் செயற்கைப் பாட்டு என்று சொன்னல் நீங்கள் கோபித்துக் கொள்ள நியாயம்

உண்டா? இந்தப் பாட்டில் கற்பனை நயம் இருக்கிறது. ஆனாலும் உண்மையான உலக்கைப் பாட்டுக்கு இது உதாரணம் ஆகாது என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

புலவர்கள் பாராட்டினார்கள், அது மாதிரியே கற்பித்துப் பாடினார்கள் என்று தெரிய வருகிறதே யொழிய, யாராவது அந்தப் பாடல்களையே தொகுத்து எழுதி வைத்தார்கள் என்று தெரியவில்லை. கட்டில்லாக் கவிதை எழுத்துக் கட்டிலேகூட அடங்காமல் போய்விடுகிறது!

ஆனாலும் நாம் அப்படிச் செய்யக்கூடாது. சங்க காலத்துப் புலவர்கள் கேட்ட அந்த வளப்பமான பாடல்கள் இந்தக் காலத்திலே கிடைக்காவிட்டால் குற்றமில்லை. இந்தக் காலத்திலும் கட்டில்லாத கவிதை நாடோடியாக வழங்கிக் கொண்டிருக்கிறது. மலையின் மேல் தினையைக் குத்தும் மடமகளிர் பாடல் நமக்குக் கிடைக்கவில்லையே என்று, நம்முடைய கிராமத்திலே நெல்லுக் குத்தும் பெண்மணியின் பாட்டையும் மறந்துவிடவேண்டாம். சுண்ணாம்பு குத்தும் பெண்கள் தங்கள் வேலையில் உண்டாகும் சிரமத்தை மறப்பதற்காகப் பாடுகிறார்களே, அந்தப் பாடல்களிலே இருக்கும் இன்பத்தை நுகரப் பழகிக்கொள்வோம். பழங்காலத்து வள்ளைப்பாட்டின் புதிய உருவம் இது. ஆகையால் இதையும் புறக்கணித்துவிடக் கூடாது. இதோ ஒரு பெண்பிள்ளையின் இக்காலத்து வள்ளைப் பாட்டை, சுண்ணாம்பு இடிக்கும் பாட்டை, கேளுங்கள்:

அஞ்சு பிராயத்திலே - ஏலேலமடி ஏலம்
அறியாத நாளையிலே - ஏலேலமடி ஏலம்
கொஞ்சம் பிராயத்திலே - ஏலேலமடி ஏலம்
கூடினோமே ரெண்டுபேரும் - ஏலேலமடி ஏலம்
ஆகாத காலம்வந்து - ஏலேலமடி ஏலம்
ஆளுக்கொரு தேசம்போனோம் - ஏலேலமடி ஏலம்.

இதிலே கவிதை யில்லையா? காதல் இல்லையா? சோகம் இல்லையா? வாழ்க்கையை உள்ளவாறே சொல்லும் இயற்கைச் சுவை இல்லையா?

இந்த மாதிரி ஆயிரக்கணக்கான பாடல்கள் இன்றும் தமிழ்நாட்டில் நாடோடியாக உலவுகின்றன. இந்த உலக்கைப் பாட்டுக்கு இனமான நாடோடிப் பாடல்களுக்குத்தான் கணக்கு வழக்குண்டா? ஏற்றக் காரன் பாடும் பாட்டு, பூசாரி தெய்வத்தை அழைக்கும் பாட்டு, தாய்மார்கள் குழந்தையைத் தூங்கவைக்கும் தாலாட்டுப் பாட்டு, மாடு மேய்க்கும் இடையன் கன்றோடு கன்றாய்த் துள்ளிக் குதித்துப் பாடும் பாட்டு - எல்லாவற்றையும் வரிசையாகச் சொல்லி முடியுமா? - எல்லாம் கட்டில்லாக் கவிதைகள். அவற்றைத் தொகுத்து அவற்றிலுள்ள ரஸத்தை நுகரும் முயற்சி தமிழர்களிடத்திலே தலையெடுக்க வேண்டும்.

வாழ்த்தும் ரகசியம்

இந்திரன் தன் ஆஸ்தான மண்டபத்தில் வீற்றிருக்கிறான். அவனைச் சுற்றித் தேவர்கள் மங்கல கீதம் முழங்குகின்றனர். தேவரம்பையர் தம்முடைய இன்னிசை யாடலால் அவனது திருவுள்ளத்தைக் களிப்பில் மூழ்குவிக்கின்றனர். புண்ணியத்தின் பயனாகிய போகங்களை நுகர்ந்து நுகர்ந்து செருக்கிய தேவர்கள் உல்லாச சல்லாபங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். தமக்கு இனிவேண்டும் பொருள் ஒன்றும் இன்றென்பார் போல இன்ப நிலையின் உச்சியை எட்டியுலவிய அவர்கள் சிலசில சமயங்களில் தங்களுக்கு மேற்பட்ட தெய்வம் ஒன்று உள்ளதென்பதை எண்ணுகின்றனர்; வாழ்த்துகின்றனர்.

எப்பொழுதும் நிகழும் காரியமன்று அது. தம்முடைய சக்தியினால் மாற்றமுடியாத இடையூறுகள் நேருங் காலத்தில் ஆணவமே உருவாகிய அவர்கள் மனத்துள் ஒரு சிறு துணுக்கு ஏற்படும். அசுரர்களால் தங்கள் வாழ்வு கெடுமென்று அஞ்சியபோ தெல்லாம் எல்லாம் வல்ல முதல்வன் ஒருவன் உளனென்று உணரும் உணர்வும் அவனை எண்ணும் கருத்தும் அவர்பால் உண்டாகும். அப்போது வாழ்த்துகிறார்கள்; வாயார வாழ்த்துகிறார்கள்; அலங்காரம் பட வாழ்த்துகிறார்கள்.

இந்திரன் முதல் எல்லாத் தேவர்களும் இவ்வாறு பரமேசுவரனை வாழ்த்துகின்ற வாழ்த்தொலி சில

சமயங்களில் அண்ட கடாகங்களையே குலுங்க வைக்கும்; சில சமயங்களில் கல்லையும் உருகுவிக்கும். அவர்கள் தங்கள் அமராவதியிலிருந்து வாழ்த்துவதோடு நிற்பதில்லை. பூவுலகிற்கும் இறங்கி வந்து தலங்களுக்குச் சென்று இறைவனை ஏத்திப் பூசித்து வழிபடுகிறார்கள்; வாழ்த்துகிறார்கள்.

இவ்வளவு வாழ்த்தும் எதற்காக? ஆண்டவன் திருவருள் எல்லாவற்றிலும் வலிதென்று உணர்ந்துதான் அப்படி வாழ்த்துகிறார்கள். ஆனால் அவர்களுடைய லட்சியம் என்ன? தாங்கள் தருக்கி வாழும் வாழ்க்கை கெடக்கூடாது, தங்கள் பதவிக்கு ஆபத்து நேரக்கூடாது, தாங்கள் சதமென்று எண்ணி இறுமாந்து நிற்கும் அமர போகங்கள் அழிவின்றி இருக்க, அந்த அமர வாழ்விலே எக்காலமும் வாழவேண்டும் என்பதே அவர்களுடைய கருத்து; அதுதான் ஆண்டவனை வாழ்த்துவதன் ரகசியம். இறைவன் புகழைப் பெருக்கிச் சொல்லச் சொல்லத் தங்கள் வாழ்க்கையின்மேல் அவர்களுக்கு ஆசை வளர்கிறதே யொழியக் குறைவதில்லை. அவர்கள் வாழ்த்துவது தாம் வாழும் பொருட்டே.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்.

* * * *

இதென்ன ஆச்சரியம்! இந்திரன் விபூதி ருத்திராட்ச தாரணம் செய்துகொண்டு பதுமாசனம் போட்டு ஒரே யடியாகத் தியானத்தில் ஆழ்ந்திருக்கின்றானே! ஆஹா! என்ன தவம்! என்ன யோகம்! எல்லாவற்றையும் மறந்து இறைவன் சரண பங்கஜங்களிலே மனத்தை லயிக்கவிட்டு இவ்வாறு தியானம்

செய்கிற அவனுக்கு என்ன வேண்டும்? அவனுடைய தியானத்தின் மர்மம் என்ன?

அவன் தியானம் செய்வது என்னவோ உண்மை தான்; இறைவன் திருக்கோலத்தை உள்ளத்தே வைத்துச் சிந்தித்து நிற்றலும் உண்மைதான். ஆனால் தன் மனத்தை இறைவன்பால் தாழ்த்துவதற்குக் காரணம் மற்ற இடங்களில் தான் தாழ்வு அடையாமல் இருக்கத்தான். வணங்கா முடியனாய்த் தேவலோக அதிபதியாய் சுவர்க்கலோக இன்பத்தை யெல்லாம் நுகர்ந்து பூரித்துத் தன்னை யாவரும் சூழ்ந்து நின்று தொழச் செம்மாந்து வாழவேண்டியே அந்தத் தியானம் செய்கின்றான். தன் வாழ்வு சதமென்பதே அவன் கருத்து. என்ன பேதைமை! எல்லாத் தேவர்களும் இத்தகையவர்களே.

> மனம்நின்பால் தாழ்த்துவதும் தாம்உயர்ந்து
> தம்மைஎல்லாம் தொழவேண்டி.

'தம்மை எல்லாம் தொழவேண்டி'த்தான் அவர்கள் மனம் தாழ்த்துகிறார்கள். எல்லாம் தம்மைத் தொழவேண்டு மென்ற எண்ணத்திலே, முடிந்தால் வரந்தரும் பெருமானும் தம்மைத்தொழத் தாம் மேலே இருக்கவேண்டும் என்ற விருப்பமும் இருக்கிறது! பத்மாசுரன் கதைதான் நமக்குத் தெரியுமே!

ஆனால் இறைவன் இவர்களை மதிக்கிறானா? மதிப்பதில்லை. அறிவு வளம் படைத்த தேவாதி தேவர்களுக்கும் அவன் அரியன். அகங்காரமே சொரூபமாக உடைய அவர்களுக்கு அவன் சேயன். அகங்காரமின்றித் தன்னை அணுகும் விலங்குகளுக்கும் பறவைகளுக்குங் கூடக் கருணை புரியும் சீலம் உடையவன்.

தேவலோகத்துச் சட்டம் அங்குள்ள மலர்களில் வண்டுகள் மொய்க்கக் கூடாதென்பது. ஆனால் சிவ பெருமான் திருமார்பிலுள்ள அழகிய கொன்றைமாலை அதற்கு விலக்காக நிற்கிறது. இயல்பாக அதிலே வண்டு மொய்க்காது. ஆனாலும் அப்பெருமான் கருணை அளவற்றுப் பொங்குவதனால் மதுகரங்கள் அக் கொன்றைத் தாரைச் சூழ்ந்து முரலுகின்றன. அப் படி மொய்ப்பதைக் காணும்போது சிவபெருமான் பரம கருணாநிதி யென்பதை நினைக்கும்படி அக்காட்சி செய்கிறது.

சூழ்த்தமது கரமுரலுந் தாரோயை.

* * *

அத்தகைய கருணாநிதியிடம் போய் நாம் செருக் குற்ற வாழ்வையும் சதமற்ற பதவியையுமா வேண்டு வது? அவன் இவைகளை வைத்துக் கொண்டு வியாபாரமா செய்கிறான்?

உண்மையான பக்தனும் இறைவன் திருவடியை வாழ்த்திப் பரவுகிறான். ஆனால் அவன் வேண்டுவது என்ன? இவ்வுலக வாழ்வல்ல; தன்னை யாவரும் தொழவேண்டுமென்பதல்ல. இந்தப் பிறவியை ஒரு நோயென்றும், மானிட வாழ்வு மாயைக் காட்டில் அலையும் அலைச்சலென்றும் உணர்ந்தவன் அவன். மீட்டிங்கு வாரா நெறியைத்தான் அவன் வேண்டு கிறான். இந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் தங்கள் இடத்தையும் பதவியையும் வாழ்வையும் இறுகப் பிடித்துக் கொண்டு நிற்பதுபோல அவன் இருக்க வில்லை. உலக நிலையாமையையும், வாழ்வு நிலையாமை யையும் உணர்ந்த அவன், இந்தப் பிறவியினாலாகும்

பயன் ஒன்றும் இல்லை, இது பாழான பிறவியென்று அறிவான். பிறவி நோயை வேரோடு அறுத்துவிட வேண்டுமென்று அவன் தவியாய்த் தவிக்கிறான். அந்தத் தவிப்பிலே இறைவன்பால் வந்து அலறிப் பரவுகிறான்.

பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானும் உன்னைப் பரவுவனே.

*　　　*　　　*　　　*

இந்திரர் முதலிய தேவர்களும் வாழ்த்துகிறார்கள். மனத்தை இறைவன்பால் தாழ்த்துகிறார்கள். மேலும் மேலும் பாழ்த்துப் போகும் செயல்களைச் செய்யத் தான் அவர்களுடைய தோத்திரத் தியானங்கள். பக்தனோ பாழ்த்த பிறப்பை அறுக்கும் பொருட்டே இறைவனை எண்ணுகிறான்.

இந்தக் கருத்தை மாணிக்கவாசகப் பெருமான் தம் திருவாசகத்தில் அழகாகச் சொல்லுகிறார்:

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான்; மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து
தம்மைஎல்லாம் தொழவேண்டி;
சூழ்த்துமது கரமுரலும்
தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே.

[வாழ்வான் - வாழும் பொருட்டு. தாழ்த்துவது - தங்கச் செய்தல். சூழ்த்த - சுற்றிய. மதுகரம் - வண்டு. முரலுதல் - ரீங்காரம் செய்தல். பாழ்த்த - பாழான.]

அகத்தியரும் யாழும்

வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு எழுந்தருளிய அகத்திய முனிவர் பொதியமலையை இருப்பிடமாக்கிக் கொண்டு பல மாணாக்கர்களோடு தவமும், தமிழும் வளர்த்து வந்தார். தமிழ்மொழியின் நயங்களெல்லாம் நன்குணர்ந்த அம்முனிவர் தமிழை வளர்க்க எவ்வெத் துறையில் முயற்சி செய்யலாம் என்று ஆராய்ந்தார். குமரித்துறைக்குத் தெற்கே பல காவதங்கள் தமிழ் நாடு விரிந்திருந்தது. குமரியாறு, குமரிமலை, பஃறுளி யாறு முதலிய பல பிரதேசங்கள் அங்கே இருந்தன. பிற்காலத்தில் அந்த நிலப்பரப்பைக் கடல் கொண்டது.

அந்தத் தென்னிலத்தில் மதுரை என்ற மாநகரம் இருந்தது. அங்கேதான் முதல் தமிழ்ச் சங்கமாகிய தலைச்சங்கம் விளங்கியது. மதுரையை ராஜதானி யாகக் கொண்டு ஆண்ட பாண்டிய மன்னர்கள் தம் முடைய தலைநகரில் தமிழ்ச்சங்கத்தை நிறுவிப் பல புலவர்களை வருவித்துத் தமிழாராய்ச்சி செய்தும், நூல் இயற்றியும் பொழுதுபோக்கி இன்புறச் செய்தார்கள். புலவர்கள் பலர் மலிவதற்கும் தமிழ்த் துறையில் பாண்டியர்களுக்கு ஊக்கம் உண்டாவதற்கும் அகத்திய முனிவர் முக்கிய காரணமாக இருந்தார். அவர் தாம் எழுந்தருளியிருந்த பொதிய மலையிலேயே ஒரு தமிழ்ச் சங்கத்தை நடத்திவந்தார். அவரிடம் பாடம் கேட்கப் பல மாணாக்கர்கள் கூடினர். அப்போது முனிவர்

தமிழில் ஓர் இலக்கண நூலை இயற்றவேண்டும் என்ற விருப்பத்தைப் புலவர்களும், மாணாக்கர்களும் தெரிவித்துக்கொண்டார்கள். அருள் நிரம்பிய தமிழ் முனிவர் அவ்வாறே மிக விரிவாக ஓர் இலக்கண நூலை இயற்றியருளினார். 'அகத்தியம்' என்ற பெயரோடு அது வழங்கலாயிற்று.

தமிழ் இயல், இசை, நாடகம் என்று மூன்று வகைப்படும். இலக்கண இலக்கியங்கள் சேர்ந்த தமிழ் நூல்தொகுதி இயலாகும்; சங்கீதமே இசை; பேச்சினாலும் அபிநயத்தினாலும் உள்ளக் கருத்தைக் காட்டுவது நாடகம். இந்த மூன்று தமிழுக்கும் உரிய இலக்கணங்களை அகத்தியர் தம்முடைய இலக்கண நூலாகிய அகத்தியத்தில் விரிவாக அமைத்தார். அவரிடம் தனித்தனியே முத்தமிழில் ஒவ்வொன்றைப் பாடங் கேட்ட மாணாக்கர்களும் உண்டு.

இசையிலும் அகத்தியர் வல்லவராக இருந்தமையால் இசையிலக்கணத்தையும், நாடக இலக்கணத்தையும் அமைக்கும் திறமை அவருக்கு இருந்தது. அவர் யாழ் வாசித்தலில் வல்லவர். இசைக் கருவிகளில் யாழ் சிறப்புடையது. பலவகையான கமகங்களைப் புலப்படுத்துவது. நாடகத்திற்கும் அக்கருவி இன்றியமையாதது. அகத்தியர் யாழில் வல்லவராக இருந்தமையால் இசை நாடகக் கலைகளில் தொடர்பும், பயிற்சியும் உடையவரானார். அவை பற்றிய இலக்கணம் இயற்றும் பேராற்றல் அவரிடம் இருந்தது.

'அகத்தியர் சிவபக்தர்; தவம் நிரம்பியவர்' என்றெல்லாம் நூல்கள் பாராட்டுகின்றன. வடமொழியிலும் தமிழிலும் அகத்தியருடைய பெருமைகளை

எடுத்துரைக்கும் நூல்களுக்குக் கணக்கில்லை. வட மொழி நூற்செய்திகள் சில தமிழ் நூல்களில் இல்லை; தமிழ் நூல்களிற் கண்ட சில செய்திகள் வடமொழி நூல்களில் இல்லை.

அகத்தியர் யாழ் வாசித்தலில் வல்லவர் என்ற செய்தி வடமொழி நூல்களில் காண்பதற்கு அரி தென்று தெரியவருகிறது. தமிழ் நூல்களில் இச் செய்தி வந்துள்ள இடங்கள் பல. இவற்றைக் கவ னிப்போம்.

அகத்தியர் தென்னாட்டுக்கு எழுந்தருளிய காலத் தில் அந்நாட்டின் தென்பகுதி ராவணனன் அதி காரத்துக்கு உட்பட்டிருந்ததாம். அகத்தியர் அவ் வரக்கன் ஆணைக்குள் அடங்கிய நிலத்தில் வாழ விரும்ப வில்லை. அவனைத் தென்னாட்டினின்றும் ஓட்டிவிட வேண்டுமென்று திருவுள்ளத்தில் எண்ணினார். வாட் போரோ, விற்போரோ செய்து அவனை வெல்வதென் பது நடவாத காரியம். ராவணனும் வீணை வாசிப் பதில் வல்லவன். தன்னுடைய வீணைக்கானத்தினால் சிவபெருமானுடைய மனத்தையே உருக்கினவன். ஆகவே, அவனை அந்த யாழினாலே வெல்ல வேண்டு மென்று தீர்மானித்தார் அகத்தியர்.

முனிவருக்கும் அரக்கனுக்கும் இசைப்போர் மூண் டது. "நமக்கு நடுநின்று நியாயம் வழங்குபவர் யார்?" என்று கேட்டான் ராவணன்.

"இந்தப் பொதிய மலையே நம் திறமைக்குச் சான்று பகரும்" என்றார் முனிவர்.

"எப்படி?"

"நாம் யாழ் வாசிக்கும்பொழுது இந்த மலை உருகி நம் திறமையைப் புலப்படுத்தும். இதோ நான் யாழ் வாசித்து இதை உருகச் செய்கிறேன்" என்று யாழை மீட்டினார். மெல்ல மெல்ல மலை உருகலாயிற்று. முனிவர் தம் கலசத்தை அதன்கண் வைத்து யாழ் வாசித்தலை நிறுத்தினார். சிறிது நேரத்தில் உருகிய மலை மீண்டும் இறுகிவிட்டது. அகத்தியருடைய கலசம் எடுக்க முடியாமல் மலையில் பதிந்துவிட்டது.

"இப்போது நீ யாழ் வாசி; என் கலசத்தை எடுத்துக்கொள்கிறேன்" என்றார் முனிவர். ராவணன் வாசித்தான்; முழுத் திறமையையும் காட்டினான். ஆனால் மலை சிறிதும் நெகிழ்ந்ததாகத் தெரியவில்லை. கடைசியில் அகத்தியரே மீட்டும் யாழை வாசித்துப் பொதிய மலையை உருகச் செய்து தம் கலசத்தை எடுத்துக்கொண்டார்.

இசைவாதம் ஆரம்பித்தபோதே, யார் தோல்வி அடைகிறாரோ அவர் அந்த நாட்டை விட்டுப் போக வேண்டுமென்ற நிபந்தனையோடு தொடங்கினார்கள். அதன்படியே ராவணன் தென்னாட்டை விட்டு இலங்கைக்குப் போய்விட்டான்.

இந்த வரலாறு சில சிறு மாறுபாடுகளுடன் வழங்குவதும் உண்டு. ராவணனை இசைப்போரில் அகத்தியர் வென்றார் என்ற உண்மை எல்லா வரலாறுகளுக்கும் பொதுவானது. இந்தச் செய்தியைத் தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் தெரிவிக்கின்றார்:

"தேவரெல்லாங் கூடி 'யாம் சேர விருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்கு உரியர்' என்று

அவரை வேண்டிக்கொள்ள, அவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர்....காடு கெடுத்து நாடாக்கிப் பொதியிலின்கண் இருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி''—(சிறப்.)

பொதியமலை இசைக்கு உருகின இச்செய்தியைச் சோணசைலமாலையில் சிவப்பிரகாசர் பின்வருமாறு சொல்கிறார்:

இனியபைந் தமிழின் பொதியமால் வரைபோல்
இசைக்குரு காதுஇம் மலையின்
தனயைஇன் தீஞ்சொற் குருகுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

சேரமான் பெருமாள் நாயனார் ஆதியுலா என்ற நூலை இயற்றியிருக்கிறார். திருக்கைலாய ஞான உலா என்றும் அதனை வழங்குவர். சிவபெருமான் திருவீதியில் பவனி வந்தபோது ஏழு பருவ மகளிர் அவரைக் கண்டு காமுற்றதாகச் செய்த பிரபந்தம் அது. சிவபிரான் திருவுலா வந்தபோது அப்பெருமானுக்கு அருகில் பல வகையான இசைக்கருவிகளைப் பலர் வாசிக்கின்றனர். அகத்தியர் யாழ் வாசிக்கிறார்.

"மன்னும் அகத்தியன் யாழ் வாசிப்ப" என்று சேரமான் பெருமாள் நாயனார் கூறுகிறார்.

கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டம் பெற்ற ஒட்டக்கூத்தர் 'தக்கயாகப்பரணி' என்ற நூல் ஒன்றை இயற்றியிருக்கிறார். தக்கன் செய்த யாகத்தை வீரபத்திரக் கடவுள் அழித்த வரலாற்றை விரிவாக அந்நூலில் வருணித்திருக்கிறார். அதில் ஒரு காட்சி.

தக்கயாகத்தை அழிக்கும்பொருட்டு வீரபத்திரர் தம் பூதகணங்களுடன் புறப்பட்டார். போகும்

பொழுதே வழியிலுள்ள மலைகளையும் கடல்களையும் அழித்து ஆரவாரித்துக்கொண்டு அந்தப் பூதப்படைகள் சென்றன. அவற்றுள் குட்டையான சிறிய பூதம் ஒன்று சிகரங்கள் நீட்டிக்கொண்டிருக்கும் சப்த குலா சலங்களையும் எடுத்துப் பாதாள லோகத்தில் வீசி எறிந்ததாம். அப்பொழுது அகத்தியருடைய கர்வம் அழிந்ததாம். அவர் தம் திருக்கையினுல் விந்தமலை ஒன்றைத்தான் அடக்கினுர். இந்தப் பூதமோ ஏழு மலைகளைக் குமைத்தது. பாட்டு பின்வருமாறு:

குமிழ்க்குங் குவட்டேழு
குன்றும் பிலத்தே
குளிப்பக் குறும்பூதம்
ஒன்றே குமைத்துத்
தமிழ்க்குன்றின் வாழும்
சடாதாரி பேர்யாழ்
தழங்கும் திருக்கைத்
தருக்கைத் தவிர்த்தே

[குமிழ்க்கும் - புடைத்துத் தோன்றும். குவடு - சிகரம். பிலம் - பாதாளம். குளிப்ப - மறைய. குமைத்து - அழித்து. தமிழ்க்குன்று - பொதியமலை. சடாதாரி - சடையை யுடைய அகத்திய முனிவர். தழங்கும் - ஒலிக்கும். தருக்கு - கர்வம்.]

இங்கே அகத்தியர் கையை, "சடாதாரி பேர் யாழ் தழங்கும் திருக்கை" என்று ஒட்டக்கூத்தர் சொல்கிருர். 'சடாதாரியாகிய அகத்திய முனிவரது பெரிய யாழை இசைக்கும் அழகிய கை' என்பது பொருள். அகத்தியர் யாழில் வல்லவர் என்பதை இச்செய்யுள் புலப்படுத்துகின்றதன்ருே? இங்கே உரையாசிரியர் வேடிக்கையாக, 'இதனுற் பயன் யாழ் வாசிக்க வல்லது

அத்தனையே அகத்தியன் கை எல்க' என்று எழுது கிறார்.

இவ்வாறு இலக்கியங்களால் தெரியவரும் இச் செய்தியைச் சிற்பக்கலையும் வலியுறுத்துகின்றது. சிதம்பரத்தில் உள்ள சிற்ப உரு ஒன்று அகத்திய முனிவரது திருவுருவமென்று சொல்லும்படி இருக்கிறது. 'குறு முனிவர்' என்பது அகத்தியர் பெயர். அந்த உருவத்தைப் பார்த்தால் குறளான வடிவத்தை உடையவர் என்பதற்குரிய குறிப்புக்களைக் காணலாம். தம் கைகளில் யாழை ஏந்திக்கொண்டு நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கும் அத்திருவுருவம் யாழ் வல்ல குறு முனியாகிய அகத்தியர் திருவுருவமென்றே தோன்று கிறது.

அகத்தியர் மூன்று தமிழுக்கும் இலக்கணம் வகுப்பதற்கு ஏற்றவர் என்பதற்கு அவர் கையில் உள்ள யாழும் ஓர் அறிகுறியாகத் திகழ்கின்றது.

பாட்டியும் பாரதியும்

தமிழ்நாட்டு ஜனங்களுக்கு, பள்ளிக்கூடத்தில் சில வகுப்புக்களாவது படித்தவர்களுக்கு, 'ஆத்திசூடி' தெரியாமல் இருக்க நியாயம் இல்லை. ஔவைப் பாட்டி குழந்தைகளுக் கென்றே ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்ற நீதி நூல்களைச் சின்னஞ் சிறு வாக்கியங்களால் இயற்றி யிருக்கிறாள். அந்த இரண்டு நூல்களும் குழந்தைக்கு அ, ஆ என்ற எழுத்து வரிசையைக் கூட ஞாபகமூட்டுகின்றன.

பாட்டி ஆத்திசூடியில் கடவுள் வணக்கம் சொல்லிவிட்டு உபதேசத்தை ஆரம்பிக்கிறாள்.

அறம்செய விரும்பு
ஆறுவது சினம்.

இந்த ஆரம்பம் பழைய காலத்துக்கு ஏற்றதாக, இருந்தது. பாடினவள் பெரிய ஞானியாகிய பாட்டி; அவள் தர்மம் செய்ய விரும்பு", "கோபம் கொள்ளாதே அப்பா" என்று சொல்வது இயல்புதான். அதைப் பாரதியார் பார்த்தார். அவர் தர்மத்தை வெறுப்பவரல்ல; சாந்தத்தைப் பகைப்பவரும் அல்ல. "தமிழ்நாட்டில் சோற்றுக்கே தாளம்போடும் மனிதர்கள் நிரம்பிய இந்தக் காலத்தில் தர்மம் செய் என்று சொல்லவேண்டியது அவசியந்தானா? எத்தனை தர்ம சத்திரங்கள் சோம்பேறிச் சாவடிகளாய், வஞ்சகர்களின் வாழ்வுக்கு ஆதரவு அளிக்கும் பண்ணைகளாய்

இருக்கின்றன! ஆறுவது சினம் என்று சொல்லிச் சொல்லித் தமிழ்ச் சாதியே தன் பண்டை வீரத்தை மறந்து குனிந்து குனிந்து கோழையாய்ப் போய் விட்டதே! கைகட்டிச் சேவகம் செய்வதையே வாழ்க்கையின் உச்ச சிகரம் என்று எண்ணிப் பொன் விலங்கு பூட்டிக் கொள்ளும் நிலை வந்ததே! எதைக் கண்டாலும் பயந்து நடுநடுங்கி மணிக்கு ஆயிரந் தடவை செத்துச் செத்துப் பிறக்கிறான் தமிழன். அவனுக்குச் சண்டை போடவும், வெறியூளவும், மான உணர்ச்சி மலியவும் அல்லவா உபதேசம் செய்ய வேண்டும்?" என்று அவர் யோசித்தார். உலகத்தைத் தம்முடைய பாட்டுத் திறத்தாலே பாலிக்க வந்தவர் அவர். வெறும் இலக்கிய இன்பத்துக்காக மட்டும் அவர் கவிதை செய்யவில்லை. முதுகு கோணிய சமுதாயத்தை நிமிரவைத்து, அவர்கள் பேடித்தனத்தை எடுத்துக் காட்டிக் காறி உமிழ்ந்து வெறியூட்ட வந்தவர் அவர். எனவே, அவர் ஒரு புதிய ஆத்தி சூடியை இயற்றத் தொடங்கினார். குழந்தைகளின் நெஞ்சிலே, அந்தக் காலத்துக் கோழைப் புழுக் கூட்டில் நெளிந்து கிடக்கும் சின்னஞ் சிறு குழந்தைகளின் பிஞ்சு மனத்திலே தர்மத்தையும் சாந்தத்தையும் புகட்டி அதை வெம்பிப் போகும்படி செய்வது மகா பாவம் என்று நினைத்தாரோ என்னவோ! அச்சத்தை உதறித் தள்ளும்படி உபதேசிப்பதுதான் உயர்ந்த உபதேசமென்ற எண்ணத்தோடு ஆரம்பிக்கிறார். மள மள வென்று வருகின்றன, கனலைக் கக்கும் வாக்கியங்கள்.

அச்சந் தவிர்.
ஆண்மை தவறேல்.
இளைத்தல் இகழ்ச்சி.

பழமையை அடியோடு மறந்துவிடமாட்டார் பாரதியார். அடுத்தபடி,

ஈகை திறன்

என்று பாடுகிறார்.

பாட்டி சொன்ன வாக்குகளுக்கு நேர்மாறாகச் சில இடங்களில் அவர் பாடி யிருக்கிறார். பாட்டி ‘மீதூண் விரும்பேல்’ என்று சொன்னாள். அது உணவு மலிந்த காலம். ஒரு மனிதன் உண்பது நாழி என்று அந்தப் பாட்டியே அளவெடுத்திருக்கிறாள். இப்பொழுதோ ரேஷன் அதிகாரி ஒன்றே கால் ஆழாக்கு என்று அளவெடுத் திருக்கிறான். அதிலும் மிச்சம் வைக்கும் பிராஸிகளே அதிகம். ஆகையால் பாரதி யார் பாட்டியின் வாக்கை மாற்றினார்.

ஊண் மிக விரும்பு

என்று நேர்மாறான சட்டம் போட்டார். “செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்” என்று பாட்டி கொன்றை வேந்தனில் சொல்லி யிருக்கிறாள். பாரதியோ, “இதென்னடா பைத்தியக்காரத்தனம். சம்பாதிக்கிற மனிதன் ஒருவன்; அவனைச் சுற்றிச் சிலைப்பேனைப் போல நூறு பேர். சம்பாதிக்கிறவன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கிறான். இவர் கள் முயற்சியையே மறந்து சுத்த சோம்பேறித் திருக் கூட்டத்தாராக மாறிவிடுகிறார்கள்! இப்படி யிருந் தால் சமுதாயம் உருப்படுமா?” என்று எண்ணினார். இந்தக் காலத்திற்கு ஏற்றபடி

கிளை பல தாங்கேல்

என்று புதிய ஆத்திசூடியில் விதித்தார்.

சத்துவ குணம் பயிலவேண்டு மென்பது பழங் கால உபதேசம். பாரதியார் உபதேசமோ,

ராஜஸம் பயில்
ஸையப் புடை.
ரௌத்திரம் பழகு

என்று வருகிறது.

'கூரம்பு ஆயினும் வீரம் பேசேல்' என்று பாட்டி சொன்னாள். பாரதியாகிய பேரர் என்ன சொல்கிறார்?

வெடிப்புறப் பேசு

என்கிறார். ஆம்! வெடிப்புறப் பேசும்படி அவர் மற்றவர்களுக்கு மாத்திரம் உபதேசம் செய்யவில்லை. அவர் பேச்சு, கவிதை, நடை எல்லாம் வெடிப்பாகத் தான் இருக்கும்.

அடிமைத்தன்மையைப் போக்கி வாழ்வோம் என்று சொல்கிறார் பாரதியார். அவர் வாக்கில் வெடிப்பாக வருகிறது கருத்து:

தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி.

ஒரு விஷயத்தை இகழும்போது அந்த இகழ்ச்சி வார்த்தையின் வேகத்தால் அழுத்தமாகப் படும்படி பாரதியார் பாடுகிறார்; வெடிப்புறப் பேசுகிறார். பெண்களை இழிவு செய்யும் வழக்கத்தைப் போக்குவோம் என்பதை அவர் சொல்லும் முறையே வேறு.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்!

'கொளுத்துவோம்' என்ற சொல்லில் அவர் கோபம் கொளுந்துகிறது.

தனியொருவனுக்கு உணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்ற அடியில் வார்த்தைகளும் ஓசையும் ரௌத்திரம் பழகுகின்றன என்பதைக் காதுகளே சொல்லுமே. "கொளுத்து, பொசுக்கு, மிதி, காறி உமிழ்" என்ற வார்த்தைகள் உள்ளக் கொதிப்பினால் வருபவை. இவற்றைப் பாரதியார் உணர்ச்சியோடு சொல்லுகிறாரென்பதைவிட வார்த்தைகளாலே 'நையப் புடைத்துவிடு'கிறாரென்றே சொல்லலாம்.

வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்

என்ற பாட்டிலும்,

போலிச் சுவடியை யெல்லாம் - இன்று
பொசுக்கிவிட் டாலெவர்க்கும்
நன்மையுண் டென்பான்

என்ற கண்ணன் பாட்டிலும் ஆத்திரம் என்ற அரூபமான உணர்ச்சிக்கு வார்த்தைகளாலே உருவத்தை வகுத்துவிட்டாரே!

தெய்வக் குழந்தையாகிய கண்ணன் பாரதியாரின் தோழன். அவன்,

கள்ளத்தைக் கொண்டொரு
வார்த்தைசொன் னாலங்குக்
காறி உமிழ்ந்திடுவான்.

வஞ்சகத்தின்மேல் அத்தனை க்ஷாத்திரம்!

பாதகம் செய்பவரைக் கண்டால், நம்முடைய பலஹீனத்தால் பயந்துவிடலாமா? மானிடக் குழந்தைக்குப் பாரதியார் செய்யும் உபதேசம் இதுதான்:

பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா! - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

பின் இரண்டடிகளும் குழந்தையைச் சிங்கக் குட்டியாக்கும் வீரச்சொற்கள் அல்லவா?

கெட்டதைக் கண்டால் காறி உமிழ்வதற்கு ஒரு தைரியம் வேண்டும். கோழைகளுக்கு அந்தத் தைரியம் வராது. ஆகையால் புதுமைக் கவிச்சிங்கம் இப்படியெல்லாம் கர்ஜிக்கிறது. அதன் தொனியிலேயே வீரம் பொங்குகிறது. பயம் பயந்து ஓடி ஒளித்துக் கொள்கிறது. ஆம்! "பயமென்னும் பேய்தன்னை அடித்தோம்" என்று பாடும்போது அது ஓடாமல் என்ன செய்யும்? வார்த்தைகள் கனல் கக்கும் மாய மந்திரத்தைப் பாரதியார் செய்திருக்கிறார்.

பாரதியின் தீர்க்கதரிசனம்

'ரவி அறியாததைக் கவி அறிவான்' என்று ஒரு பழமொழி உண்டு. ஸ்தூலப் பொருள்களின்மேல் தன் கிரணங்களை வீசி விளக்கும் சூரியனுக்குச் சூக்ஷ்மப் பொருள்களை விளக்கும் ஆற்றல் இல்லை. உள்ளத்தினுள்ளே நுண்ணிய அலைகளாக எழும்பும் உணர்ச்சிகளைத் தெளிவுறுத்தும் ஒளி அவன்பால் இல்லை. ஆனால் கவிஞன் தன் கற்பனைத் திறத்தால், உள்ளத்தால் உள்ளுவன எல்லாவற்றையும் அளந்து காட்டுகிறான். இந்த வகையில் கவி ரவியை மிஞ்சினவன்.

உள்ளொளி படைத்த கவிகளின் வாக்கிலேயும் ஓர் ஒளி சிறந்து நிற்கும். பாரதியார் இதை நினைந்துதான்,

> உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
> வாக்கினிலே ஒளியுண் டாகும்

என்று பாடியிருக்கிறார். அந்த உள்ளொளி மெய்ஞ்ஞானியிடம் உண்டு. கவிஞனிடமும் உண்டு. அந்த ஒளியினால் கண்ணுக்கெட்டாத பொருளையும் கண்டு கவிதையிலே காட்டும் ஆச்சரியமான காரியத்தைக் கவிஞன் சாதித்துவிடுகிறான். அணுகவொண்ணாத இடத்தில் இருப்பதைச் சொல்ல வல்லமை படைத்த கவிஞன் இடத்தை ஜயித்துவிடுகிறான். அப்படியே அவன் காலத்தையும் தாண்டிச் செல்கிறான். அவனது உள்ளொளி நெடுந்தூரத்துப் பொருளைக் காட்டுவ

தோடு நிற்பதில்லை; நெடுங்காலத்துக்குப் பின் வருவதையும் காட்டுகிறது. அவன் தூரதரிசி; தீர்க்க தரிசியும் ஆகிறான்.

பாரதியார் கவிதைவெறி மூண்ட உள்ளம் படைத்தவர். அந்த உள்ளத்துள்ளே ஒளி படைத்தவர். அதனால் அவர் வாக்கினிலும் ஒளி உண்டாயிற்று. இதாலி நாட்டு மாஜினியின் வீரத்தையும் ரஷ்யாவின் புரட்சியையும் பெல்ஜியத்தின் வீழ்ச்சியையும் தூர தரிசியாக நின்று பாடினார். அது பெரிய காரியமல்ல. அடிமைத் தளையிலே சிக்கி உள்ளங் குமுறும் பாரத வாசியின் உள்ளத்தின் ஆழத்திலே சென்று, அணுகுதற் கரிய அவ்விடத்து உணர்ச்சிக்கு உருவம் அளித்துப் பாடினார். அதுவும் பெரிதல்ல. வருங் காலத்தில் நிகழ இருப்பதை முன்பே பாடினார். இது வியக்கத் தகுந்தது. இதனால் அவர் தீர்க்கதரிசி ஆகிவிட்டார்.

அவர் காலத்தில் ரஷ்யாவில் பொதுவுடைமை நிலை கொள்ளவில்லை. அதைப்பற்றிய முழுக் கற்பனை கூட உருவாகாத காலம் அது. ஆனால் ரஷ்ய நாட்டுக் கிளர்ச்சியை முன் கூட்டியே அவர் அளவெடுத்து வாழ்த்தியிருக்கிறார்.

> மாகாளி பராசக்தி உருசியநாட் டினிற்கடைக்கண்
> வைத்தாள் ஆங்கே
> ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
> கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்

என்று ஆரம்பிக்கின்றார். மகாமேதாவிகளெல்லாம் மிகவும் ஜாக்கிரதையாகத் தூர இருந்து பார்த்து, "பிழைத்தாற் பார்க்கலாம்" என்று சந்தேக நிலையில் இருந்தபொழுது பாரதியார் தீர்க்க தரிசனத்தால்

அந்த நாட்டின் வருங்காலப் பெருமையை உணர்ந்து பாடினார்.

அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போ
தடிமையில்லை அறிக என்றார்
இடிபட்ட சுவர்போலக் கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ!

பொதுவுடைமையைப் போற்றும் நிலை உலகத்தில் இன்று வந்திருக்கிறது. முதலாளி மனப்பான்மையைத் தூவென்று தள்ளும் காலமும் வந்துவிட்டது. "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று இந்தப் பொதுவுடைமைக் கட்சியைப் பாரதியார் முன்பே பாடிவிட்டார்.

தனிஒருவனுக்கு உணவிலையெனில்
சகத்தினை அழித்திடுவோம்

என்று வீறு பேசும் அவர் வாக்கில் தீர்க்கதரிசனம் இருக்கிறது.

மகாத்மா காந்தியடிகள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை இந்திய மண்ணில் நட்டார். பாரதியார் அதன் இளமுளையைத்தான் கண்டார். அதற்குள் அவர் அமரராகிவிட்டார். ஆனாலும் அந்த முளையிலிருந்தே, இது இப்படியெல்லாம் விளையும் என்ற உணர்வு அவருக்கு உண்டாகியது. காந்தியடிகளைப் பற்றி அன்று அவர் பாடிய பாடல்கள் இன்றுதான் நன்றாக விளங்குகின்றன. அவற்றின் பொருள் இன்று நிரம்பித் தோன்றுகின்றது.

பாரதியார், சத்தியாக்கிரகத்தை மாணிக்கம் போன்ற மார்க்கம் என்று பாராட்டுகிறார் "செம்மணிமா நெறிகண்டோம்" என்று பாடுகிறார். அது 'செம்மணிமா நெறி' என்று அன்று பலர் உறுதியான

எண்ணம் கொள்ளவில்லை. ஆனால் இன்று போரின் அழிவுச் சக்திகளாலே அலைக்கப்பட்ட உலகமே சத்தியாக்கிரகத்தைப் போற்றுகிறது. இது புதுவழியென்பதை,

பாரில் உள்ள பலநாட் டினர்க்கும்
பாரத நாடு புதுநெறி பழக்க லுற்றதிங் கிந்நாள்

என்று சொல்கிறார். உலக முழுவதும் இந்த நெறியிலே பழகுங் காலம் வரத்தான் போகிறது.

மாந்தரெல் லோரும் சோர்வை
அச்சத்தை மறந்து விட்டார்
காந்திசொற் கேட்டார் காண்பர்
விடுதலை கணத்தி னுள்ளே

என்ற பாட்டுக்குப் பொருள் இன்றல்லவா நன்றாக விளங்குகிறது ?

நாகபுரியில் கொடிப் போராட்டம் நடைபெற்றது. பல மாகாணங்களிலிருந்தும் தொண்டர்கள் சென்று அப்போராட்டத்தில் ஈடுபட்டனர். இது பாரதியார் இறந்த பிறகு நடந்த செய்தி. ஆனால் 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற அவர் பாட்டைப் படித்தால் அந்தக் கொடிப் போராட்டத்தைக் கண்டு பாடியதுபோலத் தோற்றும்.

அணியணி யாயவர் நிற்கும் - இந்த
ஆரியக் காட்சியோர் ஆனந்தம் அன்றோ ?
பணிகள் பொருந்திய மார்பும்-விறல்
பைந்திரு ஓங்கும் வடிவமும் காணீர்

என்று அவர் தொண்டர் கூட்டத்தைப் பாடுகிறார். இதை அவர் புறக்கண்ணாலே பார்க்கவில்லை. அகக் கண்ணாலே கண்ட தீர்க்க தரிசனம் இது. அதை நாம்

புறக்கண்ணுல் பல வருஷங்களுக்குப் பின் கண்டோம். செந்தமிழ் நாட்டுப் பொருநரும், கொடுந் திக்கண் மறவரும், சேர நாட்டு வீரரும், சிந்தை துணிந்த தெலுங்கரும், பிறரும் சேர்ந்து கொடியைக் காக்கும் காட்சியை அவர் கண்டபடி நாம் கண்டோம்.

இன்று விஞ்ஞானத்தின் விளைவினுல் தினமும் ரேடியோவைக் கேட்டு மகிழ்கிறோம். டெல்லியில் தலைவர் ஜவாஹர்லால் பேசுகிறுர். நாம் குமரிமுனையில் இருந்தாலும் இருந்தபடியே கேட்கிறோம். பாரதியார் வாழ்ந்த காலத்தில் இப்படி ஒன்று விஞ்ஞானத்தால் விளையப்போகிற தென்றுல் யாரும் நம்பமாட்டார்கள். ஆனுல் பாரதியார் சொல்லியிருக்கிறுர்.

காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

என்ற பாட்டு ரேடியோவை ஞாபகப் படுத்தவில்லையா ? பாரதியார் இதைப் பாடிய அன்று, ‘இது வெறும் கவிக் கனவு’ என்றுதான் மனிதர்கள் நினைத்திருப்பார்கள். இன்று அது உண்மை நிகழ்ச்சியாகி விட்டது.

நம் நாட்டில் இன்று மந்திரி பதவியை வகிக்கும் மங்கையர் இருக்கின்றனர். சட்ட சபைக் கூட்டத்தைத் தலைமை வகித்து நடத்துவோர் இருக்கின்றனர். பாரதியார் இவர்களை வரவேற்றிருக்கிறுர்.

பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள்
நடத்த வந்தோம்

என்று பாடியதை அந்தக் காலத்தில் பார்த்தவர்களில்

பாரதியாரின் நண்பர்கள், "எத்தனை ஆசை இவருக்கு! இது வீண் பேராசை" என்று நினைத்திருப்பார்கள். மற்றவர்கள், "என்னவோ பைத்தியம் உளறுகிறது!" என்று சொல்லியிருக்கக்கூடும். இன்றோ, பட்டங்கள் ஆண்டு சட்டங்கள் செய்யும் பெண்களைக் கண்ணாரக் காண்கிறோம்.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அமெரிக்காவுக்குச் சென்று இந்தியாவின் நிலைமையைத் தீயைக் கொப்புளிக்கும் பிரசங்கங்களால் விளக்கினார். மீண்டும் விடுதலை பெற்ற இந்தியாவின் பிரதிநிதியாக அகில ஐக்கிய மகா சபைக்குச் சென்று இந்தியாவின் உயர்வை நிலை நாட்டினார். எத்தனையோ மகளிர் கல்வி கற்கப் பிற நாடுகளுக்குச் சென்று வருகின்றனர். பாரதியார் இத்தகைய புதுமைப் பெண்களை வரவேற்று இருபத்தைந்து, முப்பது வருஷங்களுக்கு முன்பே பாடிவிட்டார்.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேறவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்

என்பது அவர் தீர்க்கதரிசனப் பாட்டு.

இந்திய நாட்டையே தெய்வமாக வைத்துப் போற்றும் வழக்கம் நமக்கு வந்துவிட்டது. பாரத தேவி யென்று பாட்டும் படமும் எழுதிப் போற்றுகிறோம். பாரதியாரே அதற்கு வழிகாட்டியிருக்கிறார். பராசக்தியின் ஒரு கூறாகவே அவர் பாரத தேவியைக்

கருதினார்; வழிபட்டார்; பாடினார். பழைய புலவர்கள் தெய்வங்களைப் பல பலவிதமாகத் தோத்திரம் செய்திருக்கிறார்கள். அந்த மாதிரியே பாரத தேவியைப் பாரதியார் பாடியிருக்கிறார். பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி, பாரத தேவியின் திருத்தசாங்கம், பாரத மாதா நவரத்தின மாலை என்ற பாடல்களின் உருவங்கள் பழைய சம்பிரதாயத்தை அநுசரித்தவை.

பாரத தேவியின் திருத்தசாங்கம் என்பது அத்தேவியின் சிறப்பை விளக்கும் பத்து அங்கங்களைப் பற்றிச் சொல்வது. அங்க மென்றது தலை, கால் முதலியவற்றை அல்ல; பதவிப் பெருமையைக் காட்டும் உரிமைப் பொருள்கள். பாரத தேவியின் நாமம், நாடு, நகர், ஆறு, மலை, வாகனம், ஆயுதம், முரசு, மாலை, துவஜம் என்ற பத்தையும் புகழ்ந்து பாடியிருக்கிறார் பாரதியார்.

பாரத மென்பது ஒரு தேசம். பாரத நாட்டை ஆரிய நாடென்றும் சொல்வது பாரதியார் வழக்கம். பாரத தேவியின் நாடு இது என்னும் போது, "வான் நாடு, பேரிமய வெற்புமுதல் பெண்குமரி யீறாகும், ஆரியநா டென்றே அறி" என்று பாரதியார் எல்லைகட்டிச் சொல்கிறார்.

பாரத தேவியின் நகரம் எது? அவள் எழுந்தருளியிருக்கும் நகரம் என்று தனியே எதைக் குறிப்பிடுவது? பாரதியார் காலத்தில் பாரத தேவிக்குக் கோயில் உண்டாகவில்லை. இருந்திருந்தால் சுலபமாக அந்தக் கோயில் உள்ள ஊரைச் சொல்லிவிடலாம்.

பாரத தேவிக்குத் திருக்கோயில் கட்டவேண்டு மென்று காலஞ் சென்ற ஸ்ரீ சுப்பிரமணிய சிவா விரும் பினர். சேலம் ஜில்லாவில் பாப்பாரப் பட்டியில் கோயில் கட்ட எண்ணிச் சித்த ரஞ்சன தாஸைக் கொண்டு அஸ்திவாரமும் நாட்டினர். ஆனல் கோயில் எழும்பவில்லை. பாரத தேவிக்குரிய தலமும் அவர் காலத்தில் நிர்த்தாரணம் ஆகவில்லை.

பல வருஷங்கள் சென்ற பிறகு பாரத தேவிக்குக் கோயில் உண்டாகியது. அதைத் திறந்து வைக்கும் பெருஞ் செயலைப் பாரத தேவியின் தலைமகனராகிய காந்தியடிகள் நடத்தி வைத்தார். இன்றும் அக்கோ யில் யாவரும் கண்டு மகிழ விளங்குகிறது.

பாரத தேவியின் திருக்கோயில் உள்ள அந்த நகரம் எது தெரியுமா? எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். பாரத மக்களுக்குப் புனிதமான தலமாக விளங்கும் காசியிலே, மகாத்மாவால் திறக்கப் பெற்ற பாரத தேவி திருக்கோயில் நிலவுகிறது. எனவே பாரத தேவிக்குரிய நகரம் என்று ஒன்றைச் சொல்லவேண்டு மானல் காசித்தலத்தைத்தான் சொல்லலாம்.

பாரதியார் அதைத்தான் தேவிக்குரிய நகரமாகப் பாடியிருக்கிருர். பாரத தேவியின் கோயில் காசியில் எழும்புவதற்குப் பல வருஷங்களுக்கு முன்பே பாடி யது அந்தப் பாட்டு. காசியிலே கோயில் கட்டியவர் களுக்கு இந்தப் பாட்டு ஒன்று இருப்பதே தெரியாது. அவ்வளவு தூரம் போவானேன்? பல தமிழருக்கே பாரதியார் பாரத தேவியைத் தம் கவிதையால் முன்

கூட்டியே காசியிலே பிரதிஷ்டை செய்துவிட்ட செய்தி தெரியாதே!

இன்மழலைப் பைங்கிளியே எங்கள் உயிரானுள்
நன்மையுற வாழும் நகரெதுகொல் - சின்மயமே
நானென் றறிந்த நனிபெரியோர்க் - கின்னமுது
தானென்ற காசித் தலம்.

பாட்டில் வெட்ட வெளிச்சமாகக் காசித்தலமென்றே சொல்லியிருக்கிருர். காசியென்று அர்த்தம் பண்ணும்படி வேறு வார்த்தை போடவில்லை. பாரதியார் தீர்க்க தரிசியா அல்லவா? நீங்களே, சொல்லுங்கள்.

காக்கைச் சிறகினிலே!

கண்ணபிரானைப் பெரியாழ்வார் முதல் எத்தனையோ பக்தர்களும், கவிஞர்களும் மிக அருமையாகப் பாடியிருக்கிறார்கள். அவனுடைய திருமேனிப் பேரெழிலையும் திருவிளையாடல்களையும் மதுரங் கனிந்த கவிகளாலே அன்பு கனிந்து பாராட்டி யிருக்கிறார்கள். பக்தர்களுக்கும் கவிஞர்களுக்கும் மேக படலத்தைக் கண்டால் கண்ணனது திருமேனி நினைவுக்கு வருகின்றது. கடலிலும், நீலமணியிலும், காயாம்பூ மலரிலும் நந்தகுமாரனுடைய எழில் வண்ணம் இருப்பதைக் கண்டு ஆனந்திக்கிறார்கள்.

பாரதியாரும் நந்த குமாரனைப் பாடி யிருக்கிறார். கண்ணனைக் குழந்தையாக வைத்துப் பாடினார் பெரியாழ்வார். பாரதியார் அதோடு நிற்கவில்லை; தாயாக வைத்துப் பாடினார். பாரதியாருக்குக் கண்ணன் குருவாக இருப்பதோடு சீடனாகவும் வருகிறான். அவனை அரசனென்றும் தந்தை யென்றும் பாடினார் பாரதியார். அது புதுமையல்ல. தோழனாகவும், சேவகனாகவும் வைத்துப் பாடியதுதான் புதுமை. கண்ணனைக் காதலனாக வைத்துப் பாடின கவிஞர் பலர். பாரதியார் கண்ணனைக் காதலனாக்கிப் பல காட்சிகளைப் புனைந்து பாடி யிருக்கிறார்; அது பெரிய புதுமை அல்ல. கண்ணனையே பெண்ணாக்கி, கண்ணம்மா என்று திருநாமம் சூட்டி அந்த "வாலைக் குமரியை மருவக் காதல் கொண்டு" மிக அற்புதமான பாடல்களைப் பாடி யிருக்கிறார். இது புதுமையிலும் புதுமை.

வர்ணனைகளிலும் உபமானங்களிலும் பாரதியார் புகுத்திய புதுமைகள் பல. கண்ணனது திருமேனி யழகை அவர் அநுபவிக்கும் முறையிலே புதுமை இருக்கிறது.

கடலும் மேகமும் காயாம்பூவும் மயிற் கழுத்தும் பார்க்கும்போது நம் கண்ணுக்குக்கூட அழகாகவே தோற்றுகின்றன. கண்ணன் மயில் கழுத்தைப் போன்ற வண்ணத்தானென்று சொல்லும் போது, பளபளக்கும் அந்த நீல வண்ணம் எல்லா வகையிலும் கண்ணன் எழிலுக்குப் பொருத்தந்தான் என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் பாரதியார் கூறும் உவமை ஒன்று சிறிது குழப்பத்தை உண்டாக்குகிறது.

காக்கைச் சிறகினிலே நந்தலாலா - உன்றன்
கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா

என்ற அடிகளிலே கண்ணபிரான் நீலவண்ண மேனிக்குக் காக்கையின் சிறகிலுள்ள கருநிறத்தை ஒப்புக் கூறுகிறார் பாரதியார். புதுமைதான்; பொருத்தமாக இருக்கிறதா? ஏதோ உணர்ச்சியில் பாடிவிட்டார் போலும் என்று முதலில் நினைக்கத் தோன்றுகிறது. "போயும் போயும் காக்கைதானா இவருக்குக் கிடைத்தது?" என்று சொல்லும் நண்பர்களும் இருக்கலாம்.

கவிஞர் பரம்பரையிலே முன்காலத்தில் யாராவது காக்கையைச் சிறப்பித்திருக்கிறார்களா என்று பார்க்கலாம். பலர் புகழ்ந்து பாடி யிருக்கிறார்கள். காக்கை கரைந்தால் யாரேனும் விருந்தினர் வருவார்கள் என்பது ஒரு நம்பிக்கை. தன் காதலன் வருவானா என்று ஏங்கி நிற்கும் காதலி, காக்கை கரைந்தது கேட்டு, வந்து

விடுவான் என்று ஆறுதல் பெறுகிறாள். அப்படியே அவன் வருகிறான். அவளுடைய ஆனந்தத்தைச் சொல்ல வேண்டுமா? தன் காதலன் வரவைத் தன்னுடைய ஒலியால் அறிவித்த காக்கையினிடம் அவளுக்கு நன்றியறிவு பொங்குகிறது. "நல்ல சம்பா அரிசியால் சமைத்த சாதத்தில் பசு நெய்யை நிறையக் கலந்து பொற்கிண்ணத்தில் வைத்துக் காக்கைக்கு விருந்து செய்யவேண்டும். அதுகூடப் போதாது" என்று அவள் பாராட்டுகின்றாள். இதைக் கவியாகச் செய்தவர் நச்செள்ளையார் என்ற பெண் புலவர். இந்தப் பாட்டு நன்றாக இருந்ததனால் அவருக்குக் "காக்கை பாடினியார்" என்னும் பெயரே அமைந்து விட்டது. காக்கையைப் பாடிய பெண்மணியார் என்பது அப்பெயரின் பொருள்.

அந்தப் பாட்டில் காக்கை கரைந்தது நல்ல நிமித்தமாக இன்பம் விளைந்ததைத்தான் 'காக்கை பாடினியார்' சொல்லுகிறார். இந்த நிமித்தத்தைப் பற்றி வேறு புலவர்களும் பாடியிருக்கிறார்கள்.

காக்கை வலமாகப் போனால் நல்ல சகுனம் என்பார்கள். இதையும் புலவர்கள் குறித்ததுண்டு. இன்னும், காலையிலே எழுவதையும், மறைவாகக் காதல் செய்வதையும், மாலையிலே குளித்து மனை புகுவதையும், தன் இனத்தோடு உண்ணுவதையும், உறவாடுவதையும் காக்கையினிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒரு பாட்டுச் சொல்கிறது. தமிழ் இலக்கியங்களில் 'காகம் உறவு கலந்துண்ணும்' ஒற்றுமை வாழ்வை உயர்வாகப் பாராட்டிப் பேசும் இடங்கள் பல.

இவ்வளவும் காக்கையின் தொழிலைப் பாராட்டுவன. அதன் நிறத்தைக் கண்டு களித்தவர்களோ, கண்ணன் வண்ணத்துக்கு உவமை கூறியவர்களோ இல்லை. பாரதியார் கண்ணுக்கோ காக்கைச் சிறகினிலே நந்தலாலாவின் கரிய நிறந் தோன்றுகிறது.

இறைவன் படைத்த இயற்கை முழுவதும் எழில் மயம். மனோன்னதமான மலைகளிலே பேரழகு ததும்புகின்றதென்றால், சின்னஞ்சிறு கூழாங்கல்லிலும் அழகு உண்டு. சூரியனை நோக்கி மலரும் செந்தாமரை மலரிலே அழகு மலர்கின்றதென்று கவிஞன் சொல்லும் போது அது முக்காலும் உண்மையென்று ஆமோதிக்கிறோம். ஆனால் அதே சூரியனை நோக்கி மலரும் நெருஞ்சி மலரிலும் எழிலுண்டு என்பதைக் கவிஞன் சொல்லத்தான் நாம் அறிகிறோம். காயாம்பூவின் நீல வண்ணம் கண்ணனுக்கு உவமையாவது பொருத்தம் என்று தோற்றும் நம் உணர்வில் காக்கையின் சிறகு நிறம் மதிப்பை உண்டாக்குவதில்லை. காரணம் என்ன? கவிஞன் கண்ணுக்கு—பாரதியின் கண்ணுக்கு—மாத்திரம் அது கவர்ச்சியுடையதாக இருக்கும் ரகசியம் என்ன?

நாம் காக்கையைப் பார்க்கும்போது வேண்டாத ஒன்றை நினைக்கிறோம். வேண்டிய ஒன்றை மறந்து விடுகிறோம். விருப்பு வெறுப்பு இன்றி நடுநிலையிலிருந்து பார்க்கும் பார்வை நமக்கு இல்லாமற் போய்விட்டது. ஞானிக்கும் கவிஞனுக்கும் அந்தப் பார்வை இருக்கிறது. சமதரிசனம் ஞானிக்கு மாத்திரம் உரிய சொத்தல்ல; கவிஞனுக்கும் அந்தப் பார்வை உண்டு. காக்கையைக் காணும்போது நமக்கு ஓரளவு அருவருப்பு உண்டாகிறது; அதன் உருவத்தைத

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது வேறு நினைவுகளால் அருவருப்புத் தோன்றிவிட்டாலும் கூர்ந்து பார்த்தால் நமக்குக் கவர்ச்சியே ஏற்படுவதில்லை. அதன் சிறகைத் தனியே பார்க்கப் பொறுமை ஏது? பார்த்தாலும் அதன் கருமையில் நம் உள்ளம் செல்ல நியாயமே இல்லை.

காக்கையை நினைக்கும்போது அருவருப்பு வரக் காரணம், அது தோட்டி வேலை செய்கிறதென்ற ஞாபகம் நம் உள்ளத்தின் அடித்தளத்திலே இருப்பதுதான். போதாக்குறைக்கு அதை மூதேவியின் துவஜமென்றும், சனி பகவானது வாகனமென்றும் சொல்லியிருக்கிறார்கள். "சே! என்ன பறவை இது? அழகிய மயிலும், இன்னிசைக் குயிலும், வானின் உயரத்தை அளக்கும் பருந்தும், ஒய்யாரமாக நடக்கும் புறாவும் அழகுப் பிழம்புகளாக உலவும் பறவைக் கூட்டத்திலே இந்தக் காக்கை ஏன் பிறந்தது?" என்று சொல்லாமற் சொல்கிறோம். நம்முடைய அன்பைக் காட்டக் குழந்தைகளையும் காதலிமார்களையும் மயிலே என்கிறோம்; குயிலே என்கிறோம்; மாடப் புறாவே என்று அழைக்கிறோம். காகமே என்று சொல்வதில்லை. சொல்வதா! சொல்லித் தப்ப முடியுமா, என்ன?

காக்கையினிடம் நமக்கு மதிப்பு வரவேண்டுமானால் தோட்டி வேலையிலும் மதிப்பு ஏற்பட வேண்டும். உண்மை யுணர்வு உடையவர்களுக்குத் தோட்டியும் தொண்டைமானும் கடவுளின் குழந்தைகள். சுத்தத்தையே விரும்பும் மனித சமூகத்துக்கு அசுத்தத்தைப் போக்கும் தொண்டர்கள் வேண்டும். அவர்களே சுத்தத்தின் பாதுகாவலர்கள். வைத்தியன்

சுகத்தைப் பாதுகாக்க வந்தவன். அது நமக்குத் தெரிவதில்லை. அவன் மருந்து கொடுக்க வந்தவனென்று எண்ணுகிறோம். தோட்டி வேலை அசுத்தத்தைப் போக்கிச் சுத்தத்தைப் பாதுகாக்கும் தொண்டு. இதைக் காந்தி யுகத்தில் பிறந்தவர்கள் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். "குழந்தையின் அசுத்தத்தை அருவருப்பில்லாமல் நீக்கிப் பாதுகாக்கும் தாயைப் போல, தோட்டிகள் சமுதாயத்தின் அசுத்தத்தைப் போக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகையால் குடும்பத்தில் தாய்க்கு உள்ள ஸ்தானம் சமுதாயத்தில் தோட்டிகளாகிய பங்கிகளுக்கு இருக்க வேண்டும். நான் ஒரு பங்கி என்று சொல்லித் கொள்வதில் எனக்கு ஆனந்தம் உண்டாகிறது" என்று காந்தியடிகள் கூறுவதை நாம் கேட்கிறோம். இயற்கையிலேயே தோட்டியாக அமைந்த காக்கையைப் போற்ற இந்த உபதேசம் வழி காட்டுகிறதே! தோட்டி செய்யும் தொண்டிலே உயர்வு காணும் மகாத்மாவும், காக்கையினிடம் காதல் கொள்ளும் கவிஞனும் ஒரே உள்ளம் படைத்தவர்கள். இருவர் உள்ளங்களிலும் உண்மை ஒளி உதயமாகியிருக்கிறது.

காக்கையின் தொழிலை அருவருக்காமல் போற்றும் நெறி இது. அடுத்தபடியாக, அதன் குரலை மதிக்க அதிக முயற்சி செய்ய வேண்டியதில்லை. பிள்ளையை எதிர்பார்க்கும் எத்தனையோ தாய்மார்களுக்கு அதன் ஒலி இன்னமுதாகப் பயன்படுகிறது. இதை நாம் நினைப்பதில்லை. நினைத்தால் காக்கையின் ஒலியிலும் இனிமை காணலாம்.

அதன் கருமை? காக்கைச் சிறகின் கரு நிறத்திலே கவர்ச்சியை எப்படிக் கற்பனை செய்கிறது?—

உண்மையிலே நாம் கற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதிலே கவர்ச்சி இயல்பாகவே இருக்கிறது. அதைக் காணக் கண் நமக்கு இல்லை. காக்கையைப் பார்க்கையில் நமக்கு அசுத்தமே நினைவுக்கு வருகின்றது. இந்த நினைப்பை மறந்து விடவேண்டும். காக்கையைப் பார்க்கும் போது காக்கையையே பார்க்கவேண்டும். காக்கைச் சிறகிலே கடலின் நிறத்தைக் கொணரக் கூடாது. காக்கைச் சிறகின் கரு நிறத்தில் காயாம்பூவின் நிறமில்லையே என்று பார்க்கக் கூடாது. காக்கைச் சிறகுக் கருமையிலே காயாம் பூ இல்லை என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை காயாம் பூவின் கரு நிறத்திலே காக்கைச் சிறகும் இல்லை என்பது. காயாம் பூவைக் காணும் கண் குளிர்கிறதென்றால் காக்கைச் சிறகைக் காணும் கண்ணும் குளிர வகையுண்டு. எந்தக் கை வானப் பரப்பிலே விதானமாகப் போர்த்துப் பந்தரிடும் மேகத்தில் கருவண்ணத்தைப் பெய்ததோ, எந்தக் கரம் கடற்பரப்பிலே நீல நிறத்தை நிரப்பியதோ, எந்த எழிற்கரம் காயாம் பூவின் எழிலிலே கரு நிறத்தைத் தீட்டியதோ, எந்தத் தெய்வத் திருக்கை மயிற்கழுத்திலே ஒளிதிகழும் நீலத்தை இழைத்ததோ, அதே கை, அதே தெய்வத் திருக்கரம், காக்கையின் சிறகிலே கருநிறத்தைப் பூசிக் கோலம் செய்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிட்டோம். எழிலே பிழம்பாகிய அகண்டத்தில் காக்கை யில்லாவிட்டால் அகண்டமென்ற லக்ஷணம் இல்லை. கருமை என்ற சமஷ்டியிலே காக்கையின் கரு நிறம் இல்லாவிட்டால் இயற்கைத் தேவியின் கருவண்ணம் ஒரு பக்கம் சொட்டையாக நிற்கும். கண்ணன் கருங் கடற்பரப்பிலே

தோன்றுகிறான் என்பது உண்மையானால், அந்தக் கண்களுக்கு அதே கண்ணன் காக்கையின் கரு நிறத்திலும் தோன்ற வேண்டும். அப்படிக் காணும் பார்வை தான் கவிஞனுடைய சமதரிசனம். பாரதியார் இந்தக் கண் படைத்தவர். குழந்தையைப் பார்த்து,

எத்தித் திரியுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா

என்று சொல்லி மனித சமுதாயத்தின் மூளையிலே அமுது பெய்கிறார்.

காக்கை குருவிஎங்கள் சாதி - நீள்
கடலும் மலையும்எங்கள் கூட்டம்

என்று உலகப் பரப்பு அனைத்தும் கேட்க ஜயபேரிகை கொட்டுகிறார். அவருக்குத்தான் காக்கையின் பெருமை தெரியும்; அதன் கருமையிலே கண்ணன் காட்சி அளிப்பான்.

காக்கைச் சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரியநிறம் தோன்றுதையே - நந்தலாலா !

'பகைவனுக்கு அருள்வாய்'

பாரதியாரின் கவித்துவத்தைப்பற்றியும் தேசபக்தியைப் பற்றியும் நாம் எவ்வளவோ பேசிக்கொண்டு வருகிறோம். அவருடைய ஆத்ம குணங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். கவிஞர்களுடைய உள்ளம் அவர்கள் பாடிய கவிதையிலே மலர்ந்திருக்கும். பாரதியார் தம்முடைய வாழ்க்கையில் ஒழுங்கும், பொறுமையும், நைச்சியமும் இல்லாதவர் என்றுதான் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். ஆயினும் அவருடைய உள்ளம் கவிதா சிகரத்தை எட்டிப்பிடிக்கும் உன்னதம் வாய்ந்ததாக இருந்தது. முன்கோபம் உள்ளவராக இருந்தாலும் அவர் உள்ளம் குழந்தைத்தன்மை உடையது. தமக்கு எத்தனை துன்பம் வந்தாலும் அஞ்சாமல் தைரியத்தோடு பிறருக்கு உதவும் அன்பு அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. பகையுணர்ச்சியென்பது அவரிடம் மேற்பரப்பிலே தோன்றியதேயொழிய உள்ளத்தின் ஆழத்தில் இருக்கவில்லை.

கவிஞர்களும் வேதாந்திகளும் அநேகமாக ஒத்த குணமுடையவர்கள். அதுவும் வாழ்க்கையைப் பண்படுத்த உதவுவதுதான் கலை என்று திட்டமாக வகுத்துக்கொண்ட இந்தப் பாரத தேசத்தில், வேதாந்திகள் எதைச் சொன்னார்களோ, அதையே கவிஞர்கள் இன்னும் நயமாகச் சொன்னார்கள்.

மெய்ஞ்ஞானிக்குப் பகையும் நட்பும் இல்லை. எல்லோரையும் சமமாகப் பார்க்கும் திறம் அவன்பால்

இருக்கும். இந்த நிலை எல்லா மனிதரிடமும் இருக்க வேண்டுமென்பதே லட்சியவாதிகளின் கொள்கை.

திருவள்ளுவர் வாழ்க்கையைச் சீர்ப்படுத்தும் வழியைச் சொல்பவர். அவர் பகைவர்கள்பால் விரோதம் கொள்ளாமல் இருக்கத் தந்திரம் சொல்கிறார். ஒருவன் நமக்கு எத்தனையோ அபகாரங்கள் செய்தாலும் அவற்றை யெல்லாம் மறந்துவிடவேண்டும். எப்படி மறப்பது? அவன் செய்த உபகாரம் ஒன்றை ஆழ்ந்து சிந்தியுங்கள்; அப்போது அந்த அபகார ஞாபகங்கள் மறைந்து விடும். கொன்றதற்குச் சமானமான தீங்காக இருந்தாலும் அதனை மறந்துவிட இதுதான் வழி. இவ்வாறு வள்ளுவர் சொல்கிறார்.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

ஏசுகிறிஸ்து இந்த ஒழுக்கத்தை வற்புறுத்திப் பேசுகிறார். "நமக்கு ஒருவன் செய்த குற்றத்தை மறந்து மன்னிக்கத் தெரிந்தால்தான், நாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு இறைவனிடமிருந்து கிடைக்கும்" என்று சொல்கிறார். "நல்லதாக இருப்பதை ஆயுள் முழுவதும் மறக்காதே. தீங்காக இருந்தால் அப்பொழுதே மறந்துவிடு" என்பது வள்ளுவர் உபதேசம்.

தீங்கு செய்பவனைப் பகைக்காமல் இருப்பது ஒரு நிலை. அதற்குமேல் ஒரு நிலை உண்டு. அது அவனையும் நட்பாளனாகப் பாவித்து வாழ்வது. ஏசு நாதர், "ஒரு கன்னத்தில் ஒருவன் அடித்தால் அவனுக்கு மற்றொரு கன்னத்தையும் காட்டு" என்று சொல்கிறார். திருவள்ளுவரோ, "நமக்குத் துன்பம் உண்டாக்குகிற மனிதனைத் தண்டிக்கத்தான் வேண்டும். அவனும் திருந்த

வேண்டும்" என்று சொல்பவரைப் போல ஆரம்பிக்கிறார். குற்றம் செய்தவனைத் தக்கபடி தண்டிக்கவேண்டும் என்ற ஆத்திரந்தான் இயற்கையாக மனிதருக்கு உண்டாகும். இந்த ஆத்திரக்காரருக்கு அவர் போக்கிலே உபதேசம் செய்பவரைப் போல,

இன்னாசெய் தாரை ஒறுத்தல்

என்று ஆரம்பிக்கிறார். "நல்ல வேளை! வள்ளுவரும் நம்முடைய கட்சிக்கு வந்துவிட்டார். தீமை செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற கொள்கைதான் அவருக்கு இருக்கிறது போலும்!" என்று முதலில் தோன்றுகிறதா? ஆனால் அடுத்தாற் போல் ஏமாற்றிவிடுகிறார். "அந்த மனிதனுக்கு நன்மை செய்துவிடு. அப்போது அவன் நாண மடைந்து குன்றிப்போய், 'இவ்வளவு நல்லவருக்கு நாம் ஏன் தீமை விளைத்தோம்?' என்று மனம் குலைவான். அதுவே போதும் அவனுக்குத் தண்டனை" என்று சொல்கிறார்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

இன்று நம்முடைய தனிப்பெருந் தலைவராக விளங்கும் மகாத்மா காந்தியடிகளும் இந்த உயர்ந்த பக்குவத்தைப் பலமுறை பலவகையாக வற்புறுத்தியிருக்கிறார்.

வேதாந்தியும் கவிஞருமாகிய பாரதியாரும் இத்தகைய கொள்கையில் ஊறியவர். அவர் பகைவனை வாழ்த்த வேண்டுமென்று சொல்கிறார். "நெஞ்சமே, பகைவனிடத்திலே நீ கருணை கொள். தின்ன வருகின்ற புலியானாலும் அதனை அன்போடு போற்றுவாயாக" என்று பாடுகிறார்.

பகைவ னுக்கருள் வாய் - நன் னெஞ்சே
பகைவ னுக்கருள் வாய்!
புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே - நன்னெஞ்சே
பூமியிற் கண்டோமே.
பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் - நன்னெஞ்சே
பரமன் வாழ்கின்றான்
தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்.

கவிதையில் இந்தக் கருத்தை வெளியிட்டதன்றி, வேறொரு சமயத்திலும் அவர் உள்ளம் வெளியாயிற்று.

1906-ஆம் வருஷம் நடந்த நிகழ்ச்சி அது. இங்கிலீயர்களின் வெறுப்புக்குப் பாத்திரரான லார்டு கர்ஸன் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக ஆட்சி நடத்தி வந்தார். இந்தியர்களின் ஒழுக்கத்தைப் பற்றி இழிவாகப் பேசியவர் அவர்.

லார்டு கர்ஸனுடைய மனைவி 1906-ஆம் வருஷம் ஜூலை மாதம் இறந்துவிட்டாள். வங்காளத்தில் வெளியாகும் ஆங்கில தேசியப் பத்திரிகையான அமிருதபஜார் பத்திரிகையில் அந்த மரணத்தைப் பற்றிய குறிப்பொன்று வெளியாயிற்று. 'கர்ஸன் இந்தியருக்குச் செய்த தீமைக்குரிய தண்டனையைக் கடவுள் கைமேல் அளித்துவிட்டார். இளம்பிராயத்திலேயே அழகிய மனைவியை இழக்கும் துர்ப்பாக்கியம் அவருக்கு நேர்ந்தது' என்னும் பொருள்பட அக்குறிப்பு இருந்தது.

பாரதியார் கண்ணில் அது தென்பட்டது. அவர் கர்ஸனுடைய வாய்த் துடுக்கைக் கண்டித்தவரே. ஆனாலும் அக்குறிப்பு அவர் கண்ணையும் கருத்தையும் உறுத்திற்று. அமிருதபஜார் பத்திரிகையின் துணிவையும் தேசபக்தியையும் இயல்பாகவே பாராட்டும் இயல்புடைய பாரதியார் இந்த விஷயத்தில் அதன் போக்கை விரும்பவில்லை. "பகைவனுக் கருள்வாய்" என்று பிறகு பாடுவதற்கு ஏற்றபடி பண்பட்டு வரும் உள்ளம் அல்லவா? உடனே தாம் நடத்தி வந்த "இந்தியா"வில் ஒரு குறிப்பை எழுதினார்.

"தேசாபிமானத்திற்கும் நல்லறிவுக்கும் பெயர் படைத்ததாகிய கல்கத்தா 'அமிருதபஜார் பத்திரிகை' யைப்பற்றிக் கண்டனை வார்த்தை எழுதும்படி நேர்ந்து விட்டதே யென்று வருத்தமடைகிறோம். ஆனால் கூடப்பிறந்த சகோதரனாயிருந்த போதிலும் அவனுடைய குணங்களை மறைத்து வைப்பது அழகாக மாட்டாதல்லவா? ஆதலால் எத்தனையோ மதிப்புக்கிடமாகிய 'அமிருத பஜார் பத்திரிகை' கூட ஒரு பிழை செய்யும் பக்ஷத்தில் அதை எடுத்துக் காட்டுவது நமது கடமையாகின்றது. லேடி கர்ஸன் சென்ற வாரம் இறந்துபோய் விட்டதைப்பற்றி இப்பத்திரிகை எழுதி வரும்போது, இந்தியர்களை லார்டு கர்ஸன் கஷ்டப்படுத்தியதன் பொருட்டாக அவருக்கு இவ்வளவு பாலியத்தில் சிறந்த மனைவி இறந்துபோய் விட்டது சரியான தெய்வ தண்டனை யென்று கூறுகிறது. இது சிறிதேனும் கௌரவமற்ற மனிதர்கள் பேசும் மாதிரியாக இருக்கிறதல்லவா? நமது பரம சத்துருவாக இருந்தபோதிலும், அவனுக்கு மனைவி

யிறத்தல் போன்ற கஷ்டம் நேரிடும்போது நாம் அவன் செய்த தீமைகளை எடுத்துக் காட்டிச் சந்தோஷம் அடைவது பேடித்தனமான செய்கை. லார்டு கர்ஸன் நமக்குச் செய்த தீமைகளின் பொருட்டு அவரை வேண்டியமட்டும் கண்டனை புரியலாம். அவரைத் தகுந்தபடி சிக்ஷை புரியாமல், நம்மை இமிசித்ததன்பொருட்டு மரியாதை செய்யும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரைக் கண்டனை செய்து பேசலாம். அதைவிட்டு 'ஏ, ஏ, லார்டு கர்ஸன், நீ என்னைத் தொந்தரை செய்தாயல்லவா? அதற்காகத்தான் உன் மனைவி செத்துப் போனாள்!' என்று குழந்தைத்தனமாக அமிருத பஜார் பத்திரிகை பேசுவது அதன் பெருமைக்கு முற்றும் விரோதமாகும். உண்மையான ஆசிரியன் தனது விரோதிகளுக்குக்கூடத் துக்கம் ஏற்பட்ட சமயத்தில் இரக்கமடைவானேயன்றிச் சந்தோஷமடையமாட்டான்."

இந்தக் காலத்து ஆசிரியர்களுக்கும் இந்த உபதேசம் பயன்படும் அல்லவா?

முற்றும்



வழிகாட்டி

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழர் வாழ்க்கை எவ்வாறு இருந்தது? தெய்வ வழிபாடு எப்படி நிகழ்ந்தது? முருகக் கடவுளை எவ்வாறு பூசித்து வந்தனர்? — இத்தகைய கேள்விகளுக்கு விடை வேண்டு மானால் இந்நூலைப் படித்து உணரலாம்.

திருமுருகாற்றுப்படைக்கு மிகத் தெளிவான முறையில் அமைந்த விளக்கமும், கதை போல அமைந்த வரலாறுகளும், நூல் முழுவதும் உள்ள கருத்தின் தொகுப்பாகிய அறிமுகமும் அமைந்த புத்தகம் இது.

தண்டமிழ்ச் சான்றோராகிய திரு. வி. க. வின் முகவுரையும், மூவர்ண அட்டைப் படமும் இதற்குத் தனிச் சோபையை அளிக்கின்றன.

விலை ரூ. 2 8 0.

விஜயா

டாக்டர் சரத்சந்த்ரா சட்டர்ஜி எழுதிய நாவல்களுள் முதன்மையானது. 'இந்திரா', 'ரஜனி' என்னும் பங்கிம்சந்த்ரர் நாவல்களை மொழிபெயர்த்த ஸ்ரீ எஸ். குருஸ்வாமி, பி. ஏ., தமிழில் மொழி பெயர்த்தது. கலிகோ பைண்ட் விலை ரூ. 3—0—0

ஜோதி :— * வாசிப்பதற்குச் சுவையா யிருக்கிறது. ஸ்ரீ குருஸ்வாமி இதைச் சுவைகுன்றாமல் மொழிபெயர்த்திருக்கிறார்.

கலைமகள் :— * இந் நவீனம் படிப்பதற்கு மிக்க ஸ்வாரஸ்யமா யிருக்கிறது. ஒவ்வொரு புத்தகாலயத்திலும் வைப்பதற்கேற்ற நூல்.

The Mail :— The style of the translation is good and expressive and the story is free flowing.

ஜய பாரதி:—* மொழிபெயர்ப்பு நடை சிறப்பா யிருப்பதைக் குறிப்பிடவேண்டும். சரளமான பாஷையில், சொந்தத் தமிழ்க் கதைபோல்; அந்நியச் செற்றொடர் இல்லாமல் மொழி பெயர்த்திருப்பதை, தமிழ் இலக்கியத்திற்கு ஒரு தொண்டெனக் கூற வேண்டும். புஸ்தகம் அச்சுப் பிழை யில்லாமல் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. நல்ல பைண்ட் கட்டடத்திலிருக்கும் இப்புத்தகம் பிரசுராலயத்திற்குப் பெருமை யளிப்பதாகும்.

குமரன் :—* ஆடவரும் பெண்டிரும் படித்து இன்புறலாம். இதுமாதிரி வங்காள மொழியிலுள்ள பல இனிய கதைகளையும், நாவல்களையும் மொழி பெயர்த்துத் தமிழுலகுக்குத் தந்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் தொண்டு பெரிதும் போற்றத்தக்கது.

பாரதமணி:—* ஸ்ரீ குருஸ்வாமியின் மொழிபெயர்ப்பு வாசிப்பதற்கு எளிதாகவும் நல்ல ஓட்டம் கொண்டதாகவும் இருக்கிறது.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

புயல்

மகாகவி டாகுர்

62 - அத்தியாயங்கள்

மொழிபெயர்ப்பு :— த. நா. குமாரஸ்வாம

மலிவுப் பதிப்பு ரூ. 5 - 0 - 0 உயரிய பதிப்பு ரூ

— புகழ்மொழிகளிற் சில —

ஆனந்த விகடன் : டாகுர் எழுதியுள்ள நவி மிகச் சிறந்ததென்று கருதப்படும் "புயல்" என கதை இப்போது வெகு அழகாகத் தமிழில் மொழி பட்டு, உயர்ந்த முறையில் அச்சாகி வெளியாகி மனத்தைக் கவரும் விதமாக பைண்ட் செய்யப்ப இப்பிரசுரம் புத்தகசாலைகளிலும் ஒவ்வோர் இ இருக்கவேண்டிய அரிய பொக்கிஷமாகும்.

சக்தி : இனிமையும் தெளிவும் இயல்புமான நடையில் மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர் கும அச்சும் பதிப்பும் அருமையாயிருக்கிறது.

ஹிந்துஸ்தான் : அற்புதமான நவீனம் 'புயல் போன்ற தமிழ்நடை டாகுரின் நவீனத்தைச் சிறப் கிறது. மனத்துக்குத் திருப்தியளிக்கும் ஒப்பற்ற ந

பாரததேவி : ஒவ்வொரு புத்தகசாலையிலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷம்.

நாரதர் : இது ஓர் அழகிய வாழ்க்கைச் சித்தி

கலைமகள் : பெரிய கதை; முடிவுவரை எ சிறிதும் குறையாமல் கதைப்போக்கு இருக்கிறது தெள்ளிய மொழிபெயர்ப்பு. நல்ல பதிப்பு.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை